8 - MAY 1963

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION




ஏப்ரல்—1963



அரசாங்க விருது பெற்ற ஆரம்ப ஆசிரியர்
திரு. கே. எஸ். இராசலிங்கம்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

# மதுரை மாநில மாநாடு



வரவேற்புக் குழுத்
தலைவர்
**திரு. எஸ். பெருமாள்**



வரவேற்புக் குழு
பொதுக் காரியதரிசி
**திரு. ஜெ. ஜெ. முத்தையா**

8 - MAY 1963

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்
ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா

மலர் 25 } ஏப்ரல் 1963 { இதழ் 4

## புதிய திட்டம் வருகின்றது!

## பழைய குழப்பங்கள் அகல்கின்றன!

தமிழ்நாட்டு அரசாங்கம் தன் புதிய கல்வித் திட்டத்தைச் சென்ற மாத இறுதியில் வெளியிட்டிருக்கிறது. இந்தப் புதிய திட்டம், தமிழ் நாட்டுக் கல்வி உலகத்தில் சென்ற பதினைந்து ஆண்டுகளாக ஏற்பட்டுவந்த பல்வேறு குழப்பங்களை நீக்கி, கோணல்களை நிமிர்த்தி, குறைபாடுகளைப் போக்கி, சிறப்பும் செம்மையும் வாய்ந்த ஓர் சூழ்நிலையை உருவாக்கவல்ல ஆற்றல் படைத்ததாக அமைந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் அலசி ஆராய்ந்து பார்க்கிறபோது, "இது அல்லவா நாட்டுக்குத் தேவையான கல்வித் திட்டம்—இப்படிப்பட்ட திட்டத்தால் அல்லவா

தமிழகத்தில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் ஓங்கி உயர்ந்து சிறந்து பொலிய முடியும்!'' என்கிற எண்ணம் நாட்டின் நலனில் நாட்டம் படைத்த நல்லறிவாளர்கள் அனைவருக்கும் ஏற்படாமற் போகாது. அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்த திட்டமாகவோ, ஆர்வமும் அக்கறையும் அற்ற முறையில் உருவாக்கிய அவியலாகவோ கதம்பமாகவோ இல்லாமல் இந்தத் திட்டம், நிதானமான முறையில் ஆராயப்பட்டு, நல்லதோர் முறையில் உருவாக்கப்பட்டு, நாட்டு மக்களெல்லாம் மகிழத்தக்க முறையில் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு கட்டிடத்திற்கான கடைக்கால் எந்த அளவுக்கு ஆழமாகவும் அழுத்தமாகவும் போடப்படுகிறதோ அந்த அளவுக்குத்தான் அந்தக் கட்டிடம் உறுதி படைத்ததாகவும் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கக்கூடியதாகவும் இருக்க முடியும். அது போலவே தான், ஒரு நாட்டில் அளிக்கப்படுகிற ஆரம்பக் கல்வியானது எந்த அளவுக்கு அழுத்தமாகவும் திருத்தமாகவும் அளிக்கப் படுகிறதோ அந்த அளவுக்குத்தான் அந்த நாட்டில் புகட்டப்படுகிற உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் செம்மையும் செழுமையும் படைத்தனவாகக் காட்சி தர இயலும். கல்லூரிக் கல்வியானது ஒரு கட்டிடத்தின் மேல் தளம் போல அல்லது கூரை போல அமைந்திருப்பது என்று கூறினால், உயர்நிலைப் பள்ளிக் கல்வியானது அந்தக் கட்டிடத்தின் சுவர்கள் போல அமைந்திருப்பது என்று கூறலாம். ஆனால் ஆரம்பக்கல்வியோ அந்தக் கட்டிடத்தின் கடைக்கால் போல அமைந்திருக்கிறது.

ஆரம்பக் கல்வி வளர வளரத்தான் உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் வளரமுடியும். இந்த மூவகைக் கல்வியும் வளர வளரத்தான் ஒரு நாட்டின் தொழில் வளமும் பொருளாதார முன்னேற்றமும் விரைந்து பெருக முடியும். ஆம்! ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி, பிற உயர் கல்வியின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, நாட்டின் வளர்ச்சிக்கே இன்றியமையாமல் தேவைப்படுகிற அடிப்படை ஆகும்.

இந்த மிக முக்கியமான உண்மையை மிக நன்றாக உணர்ந்த காரணத்தால்தான், தமிழக அரசினரின் புதிய கல்வித் திட்டம், ஆரம்பக் கல்வியைப் புகட்டுவதற்குரிய கால அளவை, ஏழு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டிருந்ததை மீண்டும் எட்டு ஆண்டுகளாக உயர்த்தியிருக்கிறது. ஆரம்பக்கல்விக்கான கால அளவு, நீண்ட நெடுங்காலமாக எட்டு ஆண்டுகளாகத்தான் இருந்து வந்தது. அப்படி இருப்பதுதான் பொருத்தமான ஏற்பாடாகவும், தேவையான திட்டமாகவும், சிறந்த பயனை அளிக்கவல்ல அமைப்பாகவும் கல்வித் துறை வல்லுநர்கள் அனைவராலும் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு

வந்தது. அந்த ஏற்பாடே சிறந்த ஏற்பாடு என்பதை நீண்டகால அனுபவமும் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டி வந்தது. என்ருலும், ஏனோ தெரியவில்லை, திருவாளர் சி. சுப்ரமண்யனுர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் இந்த எட்டு ஆண்டு ஆரம்பக் கல்வி என்பது ஏழு ஆண்டு ஆரம்பக் கல்வியாக வெட்டப்பட்டது. இந்த 'வெட்டு' நியாயமற்றது, தேவையற்றது, தீங்கு பயப்பது, விரும்பத் தகாதது என்பதை இந்த 'வெட்டு' ஏற்பட்ட நேரத்திலேயே நாம் அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டினேம். இந்த விபரீதமான ஏற்பாட்டின் விளைவாக ஆரம்பக் கல்வியின் தரம் பெரிதும் குறைந்துவிடும் என்பதை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறினேம்.

"எட்டு ஏழாகக் குறைந்தாலும், இந்த வெட்டு, கல்வியின் தரத்தைப் பாதிக்காது. ஏனென்ருல் முன்னர் எட்டு ஆண்டுகளில் புகட்டப்பட்டு வந்த அதே அளவு கல்வியை ஏழே ஆண்டுகளில் புகட்டிவிடக்கூடிய முறையில் பாடதிட்டத்தைத் திருத்தி அமைத்திருக்கிருேம். எட்டாண்டுக் கல்வியை ஏழாண்டுகளில் தர ஏற்பாடு செய்திருக்கிருேம்" என்று அந்தக் காலத்தில் ஆட்சியாளர்கள் சார்பில் சமாதானம் கூறப்பட்டது. ஆனல் இந்தச் சமாதானம், அந்தக் காலத்திலேயே **"ஆரம்பக் கல்வி"** இதழானது தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியதைப்போல, ஏட்டுச் சுரைக்காயாக அமைந்ததே தவிர கறிக்கு உதவவில்லை. அரசாங்கத்தின் அந்தக் காகித ஏற்பாடு காரியத்துக்கு ஒத்து வரவில்லை. எட்டாண்டுக் கல்வியை ஏழு ஆண்டுகளில் பெறுவது, இளம் மாணவர்களால் தாங்கமுடியாத சுமையாக அமைந்துவிட்டது.

ஏழை மீண்டும் எட்டாக உயர்த்தினலன்றி அளிக்கப்படுகிற ஆரம்பக்கல்வியின் தரமும் உயராது; படித்துத் தேறுகிற பிள்ளைகளின் அறிவும் வளராது என்கிற உண்மையை ஆசிரியப் பெருமக்களும் தனியார் பள்ளி நிர்வாகிகளும் எடுத்தெடுத்துச் சொல்லி வந்தார்கள்; மறுபடியும் மறுபடியும் விளக்கிக் கூறிவந்தார்கள். இப்போது அரசாங்கமும் இந்த உண்மையை நன்ருக உணர்ந்து கொண்டுவிட்டது. உணர்ந்ததன் விளைவுதான், ஏழு மீண்டும் எட்டாக உயர்த்தப்பட்டிருக்கிற சிறந்த ஏற்பாடு. புதிய கல்வித் திட்டத்தால் தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கிற தலைசிறந்த நன்மை இந்த ஏற்பாடு என்று கூறினல்,, அது உண்மை, வெறும் புகழ்ச்சியுரை ஆகாது.

அடுத்த கல்வி ஆண்டிலிருந்து ஆங்கில மொழிப் பயிற்சி மூன்ருவது வகுப்பிலிருந்தே தொடங்கப்படும் என்பது, புதிய கல்வித் திட்டத்தில் காணப்படுகிற மற்ருெரு சிறந்த ஏற்பாடாகும். உலக

அரங்கத்தில் நம்முடைய நாடு உயர்வானதோர் இடத்தைப் பெற்று ஓங்கி நிற்க வேண்டுமானால் — விஞ்ஞான அறிவானது நாட்டின் மூலை முடுக்கெங்கும் விரைவாகப் பரவி நம் வாழ்வை வளமாக்க வேண்டுமானால் — புதுப்புது தொழில்கள் உலகத்தில் எத்தனை உண்டோ அவை அத்தனையும் நம் நாட்டில் பிறந்து வளர்ந்து செழித்து விளங்க வேண்டுமானால்—உலகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுவருகிற அறிவு வளர்ச்சியின் பயன் உடனுக்குடன் நம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கிடைத்தாக வேண்டுமானால் இந்த நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் போதுமான அளவு ஆங்கிலப் பயிற்சி இருந்தே தீரவேண்டும். மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலப் பாடம் சொல்லித்தரப்பட்டால்தான் பிற்காலத்தில் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும் எழுதவும் படிக்கவும் வசதி ஏற்பட முடியும்.

நம்முடைய நாட்டில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் குறைந்து விட்டது என்கிற குற்றச்சாட்டைச் சென்ற பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளாகப் பல்வேறு சாராரும் அடிக்கடி வீசி வருகிறார்கள் அல்லவா? அவ்வாறு கல்வியின் தரம் குறைந்திருப்பதற்கு உள்ள பல்வேறு காரணங்களில் முக்கியமானது, நம்முடைய கல்வித் திட்டத்தில் ஆங்கில மொழிக்கு அளிக்கப்பட்டுவந்த முக்கியத்துவம், சென்ற பத்தாண்டுகளில் சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு வந்திருப்பதே ஆகும்.

ஒவ்வொரு மாணவனின் தனிப்பட்ட எதிர்கால வளர்ச்சியை மட்டும் கவனத்தில் நிறுத்திப் பார்த்தாலும் சரி, இந்த நாட்டு மக்கள் சமுதாயம் முழுவதும் வளர்ச்சி பெறுவதற்குரிய வழிவகைகள் என்னென்ன என்பதை நின்று நிதானித்து ஆராய்ந்து பார்த்தாலும் சரி, ஆங்கில மொழிப் பயிற்சியை மூன்றாவது வகுப்பிலிருந்தே தொடங்குவது இன்றியமையாத ஒன்று என்கிற உண்மை வெள்ளிடை மலையென விளக்கமாவது உறுதி.

சென்ற சில ஆண்டுகளாக நம் கல்விக்கூடங்களில் சமூக நூல் என்கிற பாடம் ஒன்று புகுத்தப்பட்டு அதன் விளைவாகப் பெருங் குழப்பம் ஏற்பட்டு வந்தது அல்லவா? அந்தக் குழப்பத்தையும் அகற்றிவிட்டது புதிய கல்வித் திட்டம். சரித்திரத்திலிருந்து சில பகுதிகளையும் பூகோளத்திலிருந்து சில பகுதிகளையும் பிய்த்து எடுத்துக் கண்டபடி இணைத்து உருவாக்கப்பட்டு ஒருவகை விசித்திரக் கதம்பமாகவும், விபரீத அவியலாகவும் காட்சி அளித்து வந்தது சமூக நூல். அப்படிப்பட்ட கதம்ப மாலையாக அது காட்சி அளித்து வந்த காரணத்தால் அந்தப் பாடத்தைப் பயின்ற மாணவர்களுக்குச் சரித்திர நூலிலும் சிறந்த பயிற்சி ஏற்படாமல், பூகோள நூலிலும்

போதுமான அறிவு ஏற்படாமல், ஏதோ ஒருவகை மயக்கம் என்கிற குழப்ப நிலைதான் உருவாகி வந்தது. தேவையே இல்லாத இந்தக் குழப்பத்திற்கும் மயக்கத்திற்கும் தைரியமான முறையில் விடை கொடுத்து அனுப்பிவிட்டுப் பழையபடி சரித்திரம், பூகோளம் என்கிற இரண்டு தனித் தனிப் பாடங்களை ஏற்படுத்தித் தந்திருக்கிறது புதிய கல்வித் திட்டம். இந்த மாறுதலின் விளைவாக இனி மாணவர்கள் இரண்டு பாடங்களிலும் சிறந்த தேர்ச்சியையும் குழப்பமற்ற அறிவையும் பெற முடியும்.

வெண்ணெயையும் சுண்ணாம்பையும் ஒன்றாகச் சேர்த்துக் கலக்கிக் குழைத்துத் தந்தால் வெண்ணெயால் கிடைக்கவேண்டிய பயனும் கிடைக்காது. சுண்ணாம்பால் ஏற்படவேண்டிய நன்மையும் உருவாகாது. ஆனால் இரண்டையும் தனித் தனியாகத் தந்தால் வெண்ணெயால் கிடைக்க வேண்டிய பயனும் முழுமையாகக் கிடைக்கும். சுண்ணாம்பால் ஏறபடவேண்டிய நன்மையும் சிந்தாமல் சிதறாமல் உருவாகும். அப்படித்தான் உருவாக்கித் தந்திருக்கிறது புதிய கல்வித் திட்டம்.

ஆனால் ஒன்று. எஸ். எஸ். எல். சி. தேர்வின்போது மாணவர்கள் இந்த இரண்டு பாடங்களில் பரீட்சை எழுதவேண்டும் என்றாலும இப் பாடங்களில் 'பாஸ் மார்க்' வாங்கியே தீரவேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லையென்றும், ஒரு மாணவன் வேறு எந்தப் பாடத்திலாவது 'பாஸ் மார்க்'கை விடக் குறைவான மதிப்பெண்கள் வாங்கியிருந்தால் அந்த மாணவனை 'பாஸ்' செய்ததாக அறிவிக்கலாமா என்பதைப் பற்றி ஆராயும்போது மட்டும் (மாடரேஷன் என்னும் ஏற்பாட்டுக்கு மட்டும்) இந்தப் பாடங்களில் அவன் பெற்றுள்ள மதிப்பெண்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அரசாங்கத்தார் அறிவித்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு அவ்வளவு சிறந்ததாகத் தெரியவில்லை. சரித்திரமும் பூகோளமும் மிகவும் முக்கியமான பாடங்களாகும். ஏனைய பாடங்களைப் போலவே அந்தப் பாடங்களும் 'பாஸ்' செய்வதற்கு உரிய பாடங்களாக ஆக்கப்பட்டால்தான் அந்தப் பாடங்கள்மீது மாணவர்களுக்கு முழு அக்கறை ஏற்பட முடியும். அப்படி ஏற்பட்டால்தான் மாணவர்கள் பெறுகிற உயர்நிலைக் கல்வி முழுமை உடையதாக இருக்க முடியும். அப்படி இல்லாமல் மற்ற பாடங்களுக்கு நடைபெறுகிற தேர்வு மட்டும்தான் பாஸ் செய்வதற்கு உரிய தேர்வு, இந்தப் பாடங்களுக்கு நடைபெறுகிற தேர்வு மாடரேஷனுக்கு மட்டும் தேவைப்படுகிற தேர்வு என்று நிலைமை இருக்குமானால், மற்றப் பாடங்களெல்லாம் உயர்ந்தவை—இந்த இரு பாடங்கள் மட்டும் தாழ்ந்தவை

என்கிற தவறான மனப்பான்மை மாணவர்களின் உள்ளங்களை ஆட்கொண்டுவிடும்.

சரித்திரத்திற்கு 50 மதிப்பெண்கள், பூகோளத்திற்கு 50 மதிப்பெண்கள், ஆக மொத்தம் உள்ள 100 மதிப்பெண்களுக்கு மொத்தத்தில் ஒரு மாணவன் இத்தனை மதிப் பெண்கள் வாங்கினால் அவன் பாஸ் செய்ததாக ஆகும் என்பதாக முன்பெல்லாம் ஓர் ஏற்பாடு இருந்தது. அதே ஏற்பாட்டை மீண்டும் கொண்டு வருவது நல்லது என்று நாம் கருதுகிறோம். அதே ஏற்பாட்டைக் கொண்டு வந்தாலும் சரி, வேறு ஏதேனும் ஏற்பாட்டைக் கொண்டு வந்தாலும் சரி, இந்தப் பாடங்கள் இரண்டும், ஏனைய பாடங்களைப் போலவே பாஸ் செய்வதற்கு உரிய பாடங்களாக ஆக்கப்படுவது அவசியமாகும்.

முன்னெல்லாம் இருந்ததைப் போல உயர்நிலைப் பள்ளிகளின் இறுதி இரண்டு ஆண்டுகளில் விருப்பப் பாடம் என்கிற ஏற்பாட்டை மீண்டும் கொண்டு வருகிறது புதிய கல்வித் திட்டம். கணிதம், பௌதிகம், இரசாயனம், சரித்திரம், பூகோளம், பொருளாதாரம், விலங்கு நூல், வாணிபம், தொன்மொழிப் பாடங்கள், இந்திய மொழிகள், குடும்பக் கலை, இசை, ஓவியம், ஏனைய கவின் கலைகள் — இவற்றில் எவையேனும் இரண்டு பாடங்களை ஒவ்வொரு மாணவனும் விருப்பப் பாடங்களாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று புதிய திட்டம் தெரிவிக்கிறது.

விருப்பப் பாடம் என்கிற ஏற்பாடு தேவையான ஒன்று என்பதை எவரும் மறுக்க முடியாது. எல்லாப் பாடங்களிலும் பொதுவான பரவலான அறிவைப் பெறுகிற மாணவர்கள், ஏதேனும் ஒரு பாடத்தில் ஆழமான அழுத்தமான அறிவைப் பெறுவது நியாயமான ஏற்பாடே ஆகும். ஆனால் விருப்பப் பாடங்கள் இரண்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒன்று இருந்தால் போதும். இரண்டு விருப்பப் பாடங்கள் இருப்பது, மாணவர்கள் மீது அளவுக்கு மீறிய சுமையை ஏற்றி வைப்பதாகவே முடியும். இரண்டு விருப்பப் பாடங்கள் என்பதை ஒன்றாகக் குறைத்து விட்டு, சரித்திரம் பூகோளம் ஆகிய பாடங்களுக்கான தேர்வுகளைப் பாஸ் செய்வதற்குரிய தேர்வுகளாக உயர்த்திவிட்டால், புதிய கல்வித் திட்டத்தில் உள்ள குறைபாடு நீங்கிவிடும்.

1-வது வகுப்பு முதல் 5-வது வகுப்பு வரை ஆரம்பக் கல்வி.

6-வது வகுப்பு முதல் 8-வது வகுப்புவரை உயர்தர ஆரம்பக் கல்வி.

9-வது வகுப்பு முதல் 11-வது வகுப்பு வரை உயர்நிலைக் கல்வி.

11-வது வகுப்பின் முடிவில் எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வு.

என்கிற முறையில் அமைந்துள்ளது புதிய கல்வித் திட்டம்.

சிற்சில குறைகள் இந்தத் திட்டத்தில் காணப்படுவது உண்மை தான் என்ற போதிலும் மொத்தமாகப் பார்க்கும்போது இந்தத் திட்டம் நாட்டு மக்களால் வரவேற்கப்பட வேண்டிய எழிலும் ஏற்றமும் மிகுந்த திட்டமாகவே அமைந்திருக்கிறது என்பதை எவரும் மறுத்தல் இயலாது.

தெளிவும் திட்பமும் பயனும் பண்பும் மிகுந்த முறையில் கல்வித் திட்டத்தை உருவாக்கித் தந்துள்ள கல்வி அமைச்சர் திருவாளர் பக்தவத்சலனூர் அவர்களுக்கு நம்முடைய மனம் நிறைந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், அன்ன யாவினும் புண்ணியம் கோடி, ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்று எழில்பட இயம்பினார் புத்துலகக் கவிஞர் பாரதியார். எழுத்தறிவித்தல் அத்துணைச் சிறப்பு மிக்க பணிதான். ஐயம் இல்லை துளியும். ஆனால் அறிவிக்கப்படுகிற எழுத்து குற்றம் குறை அற்றதாக இருந்தால்தானே அதனால் கிடைக்க வேண்டிய பயன் முழுமையாகக் கிடைக்க முடியும்? அப்படிக் கிடைப்பதற்கு உரிய வழிவகைகளைத்தான் திறம்பட வகுத்துத் தந்திருக்கிறது புதிய கல்வித் திட்டம். எனவேதான் நம் பாராட்டுதல்.

---

## அறிவுக் கதிர்

முட்டுச் சந்துகள், சருக்கல் வழிகள், சதுப்பு நிலங்கள், வறண்ட இடங்கள், மேடுபள்ளங்கள், முள்ளும் கல்லும் நிரம்பிய சிறு சந்துகள்—இப்படி இருக்கின்றன பலருடைய வாழ்க்கைப் பாதைகள். இருக்கவிடலாமா அரசாங்கங்கள்?

—அறிஞர் அண்ணாத்துரை

கலைஞன், இயற்கையின் காதலன். அவன் அவளுடைய அடிமை தான். ஆனால் அவளுடைய தலைவனும் கூட.

—கவிஞர் தாகூர்

இந்த உலக வாழ்க்கையை யார் எவ்வளவு தூற்றிப் பேசினாலும் சரியே, இதைவிடச் சிறந்த வாழ்க்கையை உடைய உலகம் வேறொன்று இருக்கிறது என்பது மெய்ப்பிக்கப்படும் வரையில் இந்த உலக வாழ்க்கையை நான் ஒரு நாளும் வெறுக்க மாட்டேன்.

—தாமஸ் மூர்

# அரசாங்க விருது பெற்ற ஆரம்ப ஆசிரியர்கள்

## திரு. கே. எஸ். இராசலிங்கம்

1961–62 ஆம் ஆண்டிற்குரிய தமிழ் நாட்டு அரசாங்க விருது பெற்றுள்ள ஆரம்ப ஆசிரியப் பெரு மக்களில் ஒருவராகிய திருவாளர் கே. எஸ். இராசலிங்கம், கொங்குநாட்டைச் சேர்ந்த திருப்பாண்டிக் கொடுமுடியில் 1908ஆம் ஆண்டில் திரு. டி.கே. சுப்பராயப் பிள்ளை, திருமதி பெரியம்மாள் ஆகியோரின் திருமகனாய்ப் பிறந்தவர். மாணவர்களின் உள்ளங்களை அள்ளிக் கொள்ளத்தக்க வகையில் கல்வி பயிற்றுவதில் மிகுந்த ஆர்வமும் நிறைந்த திறமையும் படைத்தவர். அடக்கம், அன்புடைமை, ஒழுக்கம், பொறுமை முதலிய பண்புகள் யாவும் உருவெடுத்தாற் போன்ற தோற்றமும் நடத்தையும் உடையவர்.

கொடுமுடியில் உள்ள சங்கர வித்யாசாலா தொடக்கப் பள்ளியில் சென்ற 34 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆசிரியராக இருந்து ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கு அயராது தொண்டாற்றிவரும் திரு. இராசலிங்கம், தன் சலியாத உழைப்பாலும் நேர்மையான தொண்டாலும் அப் பள்ளிக்கூடத்தைச் சிறந்த நிலைக்கு உயர்த்தியுள்ளார். தெருவில் கவனிப்பாரற்று அலைந்து கிடக்கும் பிற்பட்ட வகுப்புக் குழந்தைகளையெல்லாம் வலிய அழைத்துவந்து, உணவும் உடையும் தந்து, அவர்கள் குறைகளைப்போக்கி வாழ வைப்பது, இவருடைய தனிப் பெருந் தொண்டாகும். மாணவர் இல்லம் ஒன்றைச் சீரிய முறையில் நடத்திய பெருமையும் இவருக்கு உண்டு.

கலைத் துறையில் மிகுந்த ஆர்வம் நிரம்பிய இராசலிங்கனார், மாணவ மாணவியருக்கும் அத்தகைய ஆர்வத்தை ஊட்டி, பல நாடகங்களை இனிய முறையில் நடத்தியுள்ளார். ஈரோடு தொடக்கப் பள்ளி ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் துணைத் தலைவராகப் பன்னிரண்டு ஆண்டுகள் விளங்கி அவர்கள் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டுள்ளார். கொடுமுடி பஞ்சாயத்து நீதிமன்றத்தின் உறுப்பினராக இருந்தும் நற்பணி புரிந்துள்ளார். 1951ல் இலங்கையில் நடைபெற்ற தமிழ் மாகாண மாநாட்டில் கலந்துகொண்டு அதனையொட்டி இலங்கை முழுவதிலும் ஈராயிரம் மைல்களுக்கு மேல் சுற்றுப் பயணம் செய்துள்ளார். கொடுமுடியில் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் போலீசாருக்குத் துணைபுரிந்ததற்காக மாவட்டப் போலீஸ் அதிகாரியிடமிருந்து நற்சாட்சி இதழ் பெற்றிருக்கிறார் என்பது சிறப்பாகக் குறிக்கத் தக்க செய்தியாகும்.

திரு. இராசலிங்கம் மட்டுமல்லாமல் அன்னாரின் குடும்பம் முழுவதுமே பொதுத்தொண்டு புரிவதில் பேரார்வம் கொண்டு விளங்குவது பெரு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அன்னாரின் தந்தையார், நீதிக் கட்சியின் வளர்ச்சிக்காக நற்றொண்டு புரிந்தவர். அவருடைய சகோதரர் திரு. ஹேப்பி நாராயணன், நாட்டின் விடுதலைக்காகப் பலமுறை சிறை சென்றுள்ள சிலர். இராசலிங்கனாரின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி சித்தாயி அம்மாளும், மகள் இராசலட்சுமியும் கொடுமுடி மாதர் சங்கத்தின் செயலாளர் முதலிய பதவிகளை ஏற்றுப் பெண்கள் முன்னேற்றத்திற்கான ஆக்க வேலைகளை ஆற்றிவருகிறார்கள்.

34 ஆண்டுகளாகச் சிறப்பும் செம்மையும் மிக்க முறையில் கல்வித் தொண்டு புரிந்துவரும் திரு. இராசலிங்கம் அவர்களுக்குத் தமிழக அரசினர் விருது அளித்துப் பாராட்டியிருப்பது மிகவும் பொருத்தமான செயல் என்பதை யார் மறுக்கமுடியும்?

## திரு. ஹென்ரி ஏசுதாசன்

1961–62-ஆம் ஆண்டிற்கு உரிய தமிழக அரசாங்கத்தின் விருது பெற்றுள்ள ஆரம்ப ஆசிரியர்களில் மற்றொருவர், திரு. ஹென்ரி ஏசுதாசன் அவர்கள்.



தாயில் பட்டியில் உள்ள சி. எஸ். ஐ. உயர் தொடக்கப் பள்ளியில் 1935–ஆம் ஆண்டில் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்ற திரு. ஹென்ரி ஏசுதாசன், அதுமுதல் தொடர்ந்து 29 ஆண்டுகள் தலைமையாசிரியராக விளங்கி, ஆரம்பக் கல்வியின் நல் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் நல் வாழ்வுக்காகவும், அந்தப் பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்திற்காகவும் ஓயாமல் உழைத்து வந்துள்ளார். தொடக்கத்தில் 70 மாணவர்களை மட்டுமே கொண்டதாக மிகச் சிறிய அளவில் பணியாற்றிவந்த அப் பள்ளிக்கூடம், இன்றையதினம், 385 மாணவர்களையும், அறுபதாயிரம் ரூபா பெறுமானமுள்ள கட்டிடங்களையும் கொண்டதாக ஓங்கி உயர்ந்து சிறந்து விளங்குகிறது என்றால் திரு. ஹென்ரி ஏசுதாசனின் இடைவிடாத உழைப்பும் நெஞ்ச உறுதியுமே அதற்குக் காரணமாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நல்லூரில் தோன்றிய திரு. ஏசுதாசனின் தந்தையார், திரு. ஜே. பி. தேவப்பிரியம். தாயார், திருமதி நேசமணித் தாயம்மாள்.

மாணவர்களுக்கு எழுத்தறிவிக்கும் எழில்மிகு பணி புரிவதோடு தன் கடமை தீர்ந்துவிட்டது என்று கருதி அந்த அளவில் மன அமைதி பெற்றுவிடுகிற பண்பு படைத்தவர் அல்லர் திரு. ஏசுதாசன். சாரணப் பயிற்சி, நாடக நடனப் பயிற்சி, கிராமத் தொண்டாற்றும் பயிற்சி முதலிய பல திறத் தொண்டுகளிலும் மாணவர்களின் அறிவு ஆற்றல்களை ஈடுபடுத்தி அவர்களுடைய உள்ளத்தை விரிவுபடுத்தும் உயர்பணியும் ஆற்றுபவர் அவர். அன்னாரிடம் கல்விபயின்ற எண்ணற்றவர்கள், தற்போது புகழ் மிக்க வணிகர்களாகவும் கல்லூரிப் பேராசிரியர்களாகவும், அஞ்சல், இரயில்வே, போலீஸ் முதலிய துறைகளில் உயர்தர அதிகாரிகளாகவும் விளங்கி வருகின்றார்கள். 1960 முதல் அவர் பணியாற்றிவரும் சி. எம். எஸ். சாந்தியாபுரம் உயர்தர ஆரம்பப் பள்ளியைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக அவர் உயர்த்தியிருப்பது, அவருடைய செயல் திறமைக்கும் இடைவிடாத உழைப்புக்கும் சிறந்த ஒரு சான்று ஆகும்.

அன்னார் அரசாங்க விருது பெற்றுள்ள செய்தி அறிந்ததும், சென்னை நகரில் வாழ்கின்ற அவருடைய பழைய மாணவர்கள், மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, திரு. மாயாண்டி நாடார் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் 31–3–63 அன்று அன்னாருக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தி வெள்ளிக் கோப்பை ஒன்றை அளித்து, விழாக் கொண்டாடினார்கள். மாணவமணிகளின் நெஞ்சங்களில் அழியாத இடம் பெற்றுவிட்ட அரும் சிறப்பு மிகுந்தவர் திருவாளர் ஏசுதாசன் என்பதற்கு இந்த விழா ஒன்றே போதுமான சான்றாகும் அல்லவா ?

# பேராசிரியர் கா. நமச்சிவாயர் படத் திறப்பு

## அமைச்சர் பக்தவத்சலம் பேருரை

18-3-63 மாலை 6 மணிக்குச் சென்னைப் பவழக்காரத் தெரு, ஏ. ஆர். சி. மகளிர் பள்ளியில் சென்னை நக்கீரர் கழகத் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில் பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவு நிறைவு விழா **கல்வி, நிதி அமைச்சர் கனம். எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.** திரு. இசைமணி ஆர் நாடிமுத்து இறைவணக்கம் பாடியபின் முன்னாள் துணை ஷெரிப்பும், திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் ஆட்சிக் குழு உறுப்பினருமாகிய **கே. ஏ. அருணசலம் அவர்கள், எம் ஏ., பீ. காம்.,** அமைச்சர் அவர்களையும் மற்றவர்களையும் வரவேற்றுப் பேசுகையில் 1944 முதல் நடைபெற்றுவரும் இக் கல்லூரி தமிழ் அன்னைக்குச் செய்துவரும் சேவை சிறந்த சேவை என்றும். இலக்கிய வகுப்புக்களை நடத்துவதே தமிழ் வளர்க்கும் சிறந்த பணி என்றும் எடுத்துக் கூறினர்.

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் ஆட்சிக் குழுவின் பட்டியலைப் **பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் வெளியிட்டு,** தமிழகத்தில் ஒரு தனித் தமிழ்க் கல்லூரி இருக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும், தமிழக அரசாங்கத்தாருக்குத் துணைபுரியும் வண்ணம் தனியார் கூட்டு முயற்சியால் இத்தகைய தமிழ்ப் பணி வளர்ந்து வருதலை அரசினர் போற்றவும் உதவவும் வேண்டும் எனக் குறிப்பிட்டுக் கீழ்க்கண்ட ஆட்சிக் குழு உறுப்பினர்கள் பெயர்களை வெளியிட்டார். திருவாளர்கள் : 1. சித. இராமநாதம், எம். ஏ., பீ. காம்., 2. என். ஆர். சடகோபன், 3. சி. என். சிங்காரவேலன், எம். ஏ., 4. ஆர். இராமய்ய செட்டியார், 5. கே. ஏ. அருணசலம், எம். ஏ., பீ. காம்., 6. அழ. வள்ளியப்பா. 7. சிறுவை மோகன சுந்தரம்.

**தமிழ்ப் பேராசிரியர், வள்ளல், கா. நமச்சிவாயர் திருவுருவப் படத்தை கல்வி, நிதி அமைச்சர், திறந்துவைத்துத் தம் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :** " இந்த விழாவில் கலந்துகொள்வதிலும் கா. நமச்சிவாயர் படம் திறந்துவைப்பதிலும் மகிழ்ச்சியடைகிறேன். அந்தக் காலத்தில் நாமெல்லாம் படித்தது நமச்சிவாயர் பாடப் புத்தகங்களே. அவர் சிறந்த அறிஞர். முற்போக்கான எண்ணங்களை உடையவர். இக் கழகம் நக்கீரர் கழகம். இது 18 ஆண்டுகளாகத் தமிழ்க் கல்லூரி நடத்தி வருவதாகக் கூறிய

செய்தி மகிழ்ச்சியை அளிக்கிறது. அதுவும் திருவள்ளுவர் பெயரை வைத்திருப்பது மிகச் சிறந்தது. தமிழ்க் கல்விக்காகத் தனித் தமிழ்க் கல்லூரி ஒன்று நிறுவப்பட அவசியமான உதவிகளை அரசாங்கம் வழங்கும்.''

அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துப் பொதுச் செயலாளர் திருவை. மோகன சுந்தரம் பேசியபோது, பேராசிரியர் கா. நமச்சிவாயர், நூலாசிரியர், பாடப்புத்தகங்கள் இயற்றியவர், மாணவருக்கு வேண்டிய இனிய கவிதைகள் இயற்றியவர், நாடகங்கள் எழுதியவர், பத்திரிகை நடத்தியவர், அரசினர் கல்விக் குழுக்களில் இருந்தவர், உலகம் வியக்கத் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடியவர், தமிழ்ப் புரவலரும்கூட. இத்தனைக்கும் மேலாகத் தமிழ்த் திருநாள் தோற்றுவித்தவர். அவருக்காகச் சிலை வைக்க அரசினர் ஆதரவு அளிக்கவேண்டும் எனவும் தற்சமயம், டாக்டர் மு. வ. டாக்டர். சிதம்பரநாதன், வா. தி. மாசிலாமணி முதலியார், டாக்டர் இராசமாணிக்கனார், பி. வீரராகவன் (ஆசிரியர் ஆரம்பக் கல்வி) ஆகியவர்கள் உறுப்பினர்களாக இருக்கச் சம்மதித்து உள்ளனர் எனவும் குறிப்பிட்டு அமைச்சர் ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இதற்காகத் திரு. பி. வீரராகவன் அவர்கள் ரூ. 1000/—முன்பணமாகத் தருவதாக வாக்களித்துள்ளார் என்பதையும் தெரிவித்தார்.

பின்னர் நிறைவு விழாச் சொற்பொழிவாளர் **திரு. நா. சின்னராசு எம். ஏ.,** ''சிலப்பதிகாரம்'' எனும் பொருள்பற்றி இலக்கியச் சுவையுடன் பேசினார்.

**திரு. பூ. ச. கந்தசாமி எம். ஏ.** நன்றி கூறினார். திரு. கனம். கு. காமராஜ், ராஜா சர். எம். ஏ. முத்தைய செட்டியார், கருமுத்து தியாகராயச் செட்டியார், வள்ளல் சி. எஸ். உலகநாதன், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், முதலியவர்கள் வாழ்த்துரை படிக்கப்பட்டன.

---

## அறிவுக் கதிர்

உண்மைக் கவிஞன் வெறும் நீதிப் புரோகிதன் அல்லன். உவமை அணிகளிலும் வெறும் வர்ணனைகளிலும் வீண்காலம் கழிப்பவன் அல்லன். உலகப் பிரச்சினைகள் அனைத்தையும் பற்றிய தன் கருத்தை யாருக்கும் அஞ்சாமல் கூறுபவன் அவன்.

**—வால்ட் விட்மன்**

வாழ்க்கை என்பது ஒரு கணக்குப் புத்தகம் அல்ல; அது ஒரு விசித்திரமான நாவல்

**—காண்டேகர்**

**தமிழ்நாடு சர்க்கார் கனம் கல்வி அமைச்சர்**

**உயர்திரு M. பக்தவத்சலம் B. A., B.L.**

**அவர்களிடம், மாயூரம் ஆசிரியர் பென்ஷனர்**

**சங்கத்தார் 9-4-63 ல் சமர்ப்பித்துக்கொண்ட**

# யாதாஸ்து.

---

**மதிப்புக்குரிய ஐயா,**

**வணக்கம்.**

தேசப்பணியே தெய்வீகப் பணியெனக்கொண்டு, நாட்டின் முன்னேற்றத்துக்காக அரும்பெருஞ் சேவை செய்வதுடன் ஏழை மக்களின் இன்னல்களைக் களைந்து அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவதற்கு ஆவன செய்யக்கூடிய ஆற்றல் மிகுந்த தாங்கள் எங்கள் வேண்டுகோளுக்கிசைந்து எங்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள மனமுவந்து முன்வந்தமையால், ஏழை ஆசிரியர் பென்ஷனர்களாகிய எங்களது குறைகள் அனைத்தும் இன்றே ஆதவனைக்கண்ட பனி போல் அகன்றதாகவே கருதி மகிழ்ந்து தங்களை மனபூர்வமாக வாழ்த்துகிறோம்.

மாநில சர்க்கார் கருணைகூர்ந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு பென்ஷன் சலுகையளிக்க முன்வந்து G.O., 1611, Edn, 30-8-56 தேதியிட்டும்G.O., No.1109 Edn, 31-5-58தேதியிட்டும் பிறப்பித்துள்ள உத்தரவுக்காக சர்க்காருக்கு எங்கள் இதயங்கனிந்த நன்றி வணக்கத்தைப் பணிவன்புடன் நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்னும் பழமொழிக்கிணங்கப் போற்றற்குரிய மகா புனிதமான ஆசிரியப்பணியைப் பொறுப்புடன் ஏற்று, நாட்டின் நலனுக்காகவும் மக்களின் முன்னேற்றத்துக்காகவும் அருந்தொண்டாற்றி வயது முதிர்ந்த காலத்தில் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்குக் கிடைக்கக்கூடிய மாதாந்திரப் பென்ஷன் தொகை மிக மிகக் குறைவு என்பதைப் பல்வகையிலும் நாங்கள் சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளோம்.

மாநில சர்க்கார் வழங்கிவரும் வயது முதிர்ந்தோர் பென்ஷன் தொகையும் ரூ 20-00 என நிர்ணயித்திருக்க, கல்வி அபிவிருத்திக்காகவும், மக்களின் அறிவு வளர்ச்சிக்காகவும் வாழ்நாள் முழுதும்

திரிகாண சுத்தியாய் தியாக மனப்பான்மையுடன் உழைத்து ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு நிர்ணயித்திருக்கும் பென்ஷன் தொகையோ முதியோர் பென்ஷனை விட மிகக்குறைவாயுள்ளது என்பதும் தாங்களறிந்த உண்மையாகும்.

குறைந்த பென்ஷன் தொகை பெறும் இதர சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் பிரத்தியேக பஞ்சப்படியும் அலவன்சும் அளிக்கப்பட்டு வந்தும், ஆசிரியர்களுக்கு மட்டும் எத்தகைய பஞ்சப்படியோ அலவன்சோ அளிக்கப்படாமலிருப்பது ஆசிரிய சமூகத்தினருக்கே இழைக்கப்பட்டுள்ள அநீதியாகும்.

ஆதலின் கல்வி அபிவிருத்தியிலும் ஆசிரியர் முன்னேற்றத்திலும் தீவிர பொறுப்பேற்றுக் கொண்டுள்ள எங்கள் தனிப்பெரும் தலைவராம் கனம் கல்வி அமைச்சர், ஆசிரியர்களுக்குப் பென்ஷன் சலுகையளிக்கும் சர்க்கார் உத்திரவுகளைப் புனராலோசனை செய்து, வயதுமுதிர்ந்தோருக்குப் பென்ஷன் தொகை 20-00 அனுமதித்திருப்பதை அனுசரித்து, ஓய்வுபெறும் ஆசிரியர்களின் நீண்டகால பொது நல சேவைக்குப் பெருமையளித்து ஆசிரியருக்குக் குறைந்த தொகை ரூ. 30-00 அடிப்படையான மாதாந்திர பென்ஷன் கிடைக்க உத்தரவு பிறப்பிக்க ஆவன செய்யுமாறு மிக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மாநில சர்க்கார் B. T. தலைமையாசிரியர், பண்டிதர், ஆகியோருக்கு 1-4-58 லிருந்து ரூ. 30, 35. பென்ஷன் தொகை அனுமதித்தும் பின்னர் 24-4-61 தேதியிட்ட G.O. M.S. No. 909 உத்திரவின்படி அடிப்படை சம்பளத்துடன் பஞ்சப்படியும் சேர்த்து திருத்தப்பட்ட சம்பளவிகிதத்தை அனுசரித்தும் $\frac{N}{120} \times$ 3 ஆண்டு சராசரி சம்பளத்தின் பேரில் 1-7-60 முதல் ரூ. 60, ரூ. 75 அமுலுக்கு வந்துள்ள பென்ஷன் விதிகளை அனுசரித்தும் மேற்படி தேதிக்கு முன்னதாக ஓய்வு பெற்றுள்ள ஆசிரியருக்கும் கடந்த காலத்துக்குப் பென்ஷன் வழங்காவிடினும் இனிமேலாவது வழங்கும்படி உத்தரவு பிறப்பிக்கவும் ஆவன செய்யுமாறு பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,

மாயூரம், 9-4-63.

**ஆசிரியர் பென்ஷனர் சங்க அங்கத்தினர்கள்,**
**மாயூரம்.**

# சென்னை மாநில உதவிபெறும் ஆரம்பப் பள்ளி ஆசிரிய நிர்வாகிகள்,-நிர்வாகிகள் மாநாடு

## மதுரையில் நடத்த ஏற்பாடு

---

சென்னையில் நடத்த ஏற்பாடு செய்த மாநில மாநாட்டை, இவ்வாண்டு மதுரையில் நடத்த, மதுரைத் தோழர்கள் மாகாண சங்கத்தின் அனுமதியைக் கோரினர். அக்கோரிக்கையை 3-4-63ல் சென்னையில் நடந்த நிர்வாகக்குழு பரிசிலனை செய்து, இதுவரை மதுரையில் நமது மாநில மாநாடு நடைபெறாத காரணத்தால், மாநாட்டை மதுரையில் சிறப்பாக நடத்த அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது.

இந்த நிர்வாகக் குழு கூட்டத்தில் திரு. S. பெருமாள், திரு. J. J. முத்தையா, (மதுரை சங்கத்தின் தலைவரும் காரியதரிசியும்) கலந்துகொண்டனர்.

**P. வீரராகவன்,**
(ஆசிரியர் ஆரம்பக்கல்வி)
தலைவர்.
94–95 புதுத் தெரு, மண்ணடி, சென்னை–1.

A. R. சேஷாசலம்,
பொதுக் காரியதரிசி.

# மதுரை ஜில்லா உதவிபெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்

---

7–4–63ல் திரு. S. பெருமாள் அவர்கள் தலைமையில், சுந்தரேஸ்வரர் வித்தியாலயா பாடசாலையில் மதுரை மேலூரில் கூடியது.

சென்னை மாநில சங்கம் மாநாட்டை மதுரையில் நடத்தக் கொடுத்த அனுமதியை மதுரை சங்கத்தார் ஏற்றுக்கொண்டதோடு, ஏப்ரல் மாதக் கடைசியில் இம் மாநாட்டைச் சிறப்பாக மதுரையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இம் மாநாட்டிற்கு வரவேற்புக் குழு அமைக்கப்பட்டு திரு. S. பெருமாள் அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராகவும், திரு. J. J. முத்தையா அவர்கள் பொதுக் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# வரவேற்புக் குழு அங்கத்தினர்கள்

**தலைவர் :**

திரு. S. பெருமாள்,

**பொதுக் காரியதரிசி :**

திரு. J. J. முத்தையா,

**துணைக் காரியதரிசிகள் :**

(1) திரு. S. பழனியப்பன்,
(2) ,, S. மேகராஜன்,
(3) ,, G. வரதராஜுலு,

**பொருளாளர் :**

திரு. R. வெங்கட்ராமன்,

**துணைத்தலைவர்கள் :**

(1) திரு. K. பிச்சையா,
(2) திருமதி P. R. பாசிங்கர்,
(3) திரு. ஜி. ஜி. ஜோஷீவா,
(4) திரு. ஒன்னு ராமசாமி,
(5) திரு. V. K. சிதம்பரநாத முதலியார்,
(6) திரு. K. வடிவேலு,
(7) திரு. J. D. ஆசீர்வாதம்,
(8) Rev. Father, CURIASS.

மாநாட்டிற்கு வருகை தரும் அங்கத்தினர்களுக்கு, இடவசதி, சாப்பாடு, முதலியவைகளைக் கவனிக்கவும், மாநாட்டுக் கொட்டகை அலங்கரிக்கவும், மாநாட்டின் சார்பாக மலர் வெளியிடுவதற்கும், திருவாளர்கள் P. ராமமூர்த்தி, P. பொன்னுராஜ், R. ராமசாமி, P. பாண்டி, ஜேம்ஸ்டேவிட், இவர்கள் குழுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குழுவிற்கு வேண்டிய அங்கத்தினர்களை இவர்களே சேர்த்துக் கொள்ளவும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது அப்படிச் சேர்த்துக்கொள்ள அங்கத்தினர்களின் பெயர்களைப் பொதுக் காரியதரிசியிடம் 15-4-63க்குள் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மாநாட்டின் வரவேற்புக் குழு அங்கத்தினர்களாகச் சேர விரும்பும் பாடசாலை நிர்வாகிகள் ரூ. 10/– கொடுத்து அங்கத்தினர்களாகச் சேரலாம்.

J. J. முத்தையா,
பொதுக்காரியதரிசி.
136 – B. C. Netaji Road,
Madurai-1.

# புதுக்கோட்டை மாவட்ட உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிருவாகிகளின் மாநாடு.

---

புதுக்கோட்டை கல்வி மாவட்ட உதவி பெறும் பள்ளி நிருவாகிகளின் முதல் மாநாடு 16-3-63-ம் தேதி பிற்பகல் 3-30-க்கு புதுக்கோட்டை கீழ இராஜ வீதியிலிருக்கும் T. E. L. C. உயர் ஆதாரப்பள்ளிக் கட்டிடத்தில் நடைபெற்றது. மேற்படி வட்டத்தி லுள்ள பெரும்பாலான நிருவாகிகள் மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

புதுக்கோட்டை R. C. உயர் ஆதாரப்பள்ளி நிருவாகி Very Rev. Fr. A. M. KARDOZA மாநாட்டிற்குத் தலைமை வகித்தனர். T. E. L. C. பள்ளிச் சிறுமிகள் இறை வணக்கம் பாடக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

## I. மாநாட்டின் நடவடிக்கைகள் :—

1. முதற்கண்ணுக, காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதியவர்கள் குடும்பத்தினருக்கு இந்த மாநாடு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. T. E. L. C. பள்ளிகளின் நிருவாகி Rev. இராமலிங்கம் தேவானுக்கிரகம், B. A., B. T., வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்று, இவ்வட்டத்தில் நிருவாகிகளின் சங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசியத்தையும், அச்சங்கம் செயலாற்ற வேண்டிய விதத்தைப் பற்றியும் விளக்கிக் கூறியபின், பின்வரும் நடவடிக்கைகள் நிறைவேறின.

## II. சங்க சட்ட அமைப்பு (Constitution) :—

1. **சங்கத்தின் பெயர் (Name) :** புதுக்கோட்டை கல்வி மாவட்ட உதவி பெறும் பள்ளிகளின் நிருவாகிகள் சங்கம் (Pudukkottai Educational District Aided School Managers' Association)

2. **உறுப்பினர்கள் (Membership):** புதுக்கோட்டை கல்வி மாவட்டத்திலுள்ள எல்லா உதவி பெறும் ஆரம்ப, உயர் ஆரம்பப் பள்ளிகளின் நிருவாகிகள், ஆசிரிய நிருவாகிகள் அனைவரும் இச் சங்கத்தில் உறுப்பினராய் இருப்பர். நிருவாகிகள் வர இயலாத காலத்தில் அவரின் அத்தாட்சி பெற்றுவரும் பிரதிநிதி கூட்டத்தில் கலந்து கொள்ளவும், நடவடிக்கைகளில் பங்கு பெறவும், வாக்குப் பதிவு செய்யவும் (Voting right) உரிமையாளராவர்.

3. சங்கம் செயலாற்றும் மொழி (Language Medium) : சங்க நடவடிக்கைகள் யாவும் தமிழிலேயே நடத்தப்படும். ஆனால் அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் நடைபெறும். சங்கத்தின் சட்ட அமைப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்படும்.

4. சங்கத்தின் செயல்கள் (Activities):—

(a) வெளியார் தலையீடு உதவி பெறும் பள்ளிகளின் மீது புகுத்தப்பட்டு இன்னல் விளைவிக்கும்போது அரசாங்கத்திடம் அதைத் தெரிவித்து அதை அகற்றுதல்.

(b) பள்ளிகளின் முன்னேற்றம் கருதி ஆக்க வேலையில் ஈடுபட்டு அதுபற்றிய ஆலோசனைகளை அவ்வப்போது அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தல்.

(c) ஆசிரியரின் பொது வாழ்க்கைத்தரம் வளரப் பல வழிகளில் உழைத்தல்.

(d) கல்வி முன்னேற்றத்தில் குறைவு ஏற்படும்போது அதை நிவர்த்தி செய்யத் தகுந்த முயற்சி எடுத்தல்.

(e) கல்வி முன்னேற்றம் கருதி மாநாடு நடத்துதல், விழா முதலியன நடைபெறச் செய்தல்.

(f) சங்கத்தின் பேரால் மாத வெளியீடு நடத்துதல்.

(g) சங்கத்தின் சார்பில் சொற்பொழிவு, கருத்தரங்கு முதலியன நடத்துதல்.

(h) சங்க வளர்ச்சிக்கென நன்கொடை, சந்தா முதலியன வசூலித்து, சங்கத்தின் நிதியைப் பெருக்குதல்.

(i) அரசாங்கத்தாரால் அவ்வப்போது ஏற்படுகிற கல்வி சம்பந்தமான மாறுதல்களுக்குக் கருத்துத் தெரிவித்தல்.

(j) கால மாறுதலுக்கேற்பச் சங்கத்தின் விதிகளைத் திருத்தியமைத்துக்கொள்ளல்.

(k) வருஷத்துக்கொரு முறை நிர்வாக சங்க உறுப்பினரைத் தெரிந்து கொள்ளுதல்.

(l) ஏனைய மாவட்ட நிர்வாகிகளின் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்புதல்.

(m) சங்கம் நியாயமாகத் தலையிட வேண்டிய சகல காரியத்திலும் ஈடுபட்டு ஆவன செய்தல்.

5. சங்கத்தின் குழுக்கள் (Committees) :—

1. பொதுக்குழு (General Body): சங்கத்தின் எல்லா உறுப்பினரும் இதில் அங்கம் வகிப்பர். இக்குழுவே சங்கத்தின் மேல்

சர்வ அதிகாரமுள்ளது. இதனுடைய தீர்மானம் சங்கத்தின் சகல அலுவல்களையும் கட்டுப்படுத்தும். இதனுடைய தீர்மானமே இறுதியானது. இக்குழு வருஷத்திற்கு இருமுறை கூடும். அவசியம் ஏற்படில் ஸ்பெஷல் கூட்டமும் கூட்டப்படும். இது வருஷத்திற்கொருமுறை நிர்வாக சங்கத்தின் அவயவங்களையும், சங்கப் பொறுப்பாளர்களையும் தெரிந்தெடுக்கும். இதற்குக் கோரம் மொத்த அவயவங்களில் மூன்றில் ஒரு பங்காகும்.

2. **செயற்குழு (Executive) :** இக்குழு சங்கத்தின் தலைவர் முதலிய சங்கப் பொறுப்பாளர் உட்பட பதினொரு அவயவங்களையுடையதாயிருக்கும். அவர்களாவன :- 1. தலைவர், 2. உபதலைவர், 3. செயலர்ளர், 4. துணைச் செயலாளர், 5. பொருளாளர் முதலிய ஐவரும், இதர ஆறு உறுப்பினர்களுமாவர். இக்குழு, பொதுக்குழு தீர்மானிக்கும் சகல நடவடிக்கைகளையும் கொண்டு செலுத்தும். இக்குழு மூன்று மாதத்திற்கொருமுறை கூடி, சங்கத்தின் சகல காரியங்களையும் பொறுப்பேற்றுச் செயல் நடத்தும். இக் குழு பொதுக்குழுவுக்கு உத்தரவாத முடையது. இதற்குக் கோரம் ஐம்பத்தொரு சதவிகிதமுள்ளது. இக்குழு தனக்குள் சிறு குழுவை (Sub Committee) ஏற்படுத்திச் சங்கத்தின் பல அலுவல்களைத் திறம்படச் செய்யும்.

6. **சங்கத்தின் நிதி (Fund) :—**

(a) சங்க உறுப்பினர் அனைவரும், மாதச் சந்தா ஒரு ரூபாய் வீதமாவது, அல்லது ஆண்டிற்கு ரூபாய் பன்னிரெண்டாவது செலுத்துவர்.

(b) அவ்வப்போது பொதுமக்களிடமிருந்து நன்கொடையும் வசூலிக்கப்பட்டு நிதி வசதி பெருக்கப்படும்.

(c) சங்க நிதியைத் தலைவரும் பொருளரும் பதிவு செய்யப்பட்ட பாங்கியில் (தற்சமயம் **இந்தியன் பாங்கில்**) சேர்ந்து இயக்குவர்.

(d) சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகளைப் பொருளர் இயக்கிப் பாதுகாப்பார்.

7. **பொது விதிகள் (General Rules) :—**

(a) சங்கத்தின் தலைவரே பொதுக்குழு செயற்குழுவிற்குத் தலைமை வகிப்பர். தலைவர் வர இயலாத காலத்தில் துணைத் தலைவர் தலைமை வகிப்பர்.

(b) செயற்குழுவைச் சங்கக் காரியதரிசி, தலைவரின் அனுமதியின் பேரில் கூட்டுவர். செயற்குழுவின் நிகழ்ச்சி

நிரல், தலைவர் செயலாளர் இருவருடைய தீர்மானத்திற் குட்பட்டதாயிருக்கும்.

(c) பொதுக்குழு கூட்டப்படும் தேதி, நிகழ்ச்சி நிரல் இவைகளைச் செயற்குழு தீர்மானிக்கும்.

(d) மேற் சொன்ன இரு குழுவிலுமுள்ள அவயவங்கள் தங்களுக்கு வேண்டிய பொருள் அவ்வக் கூட்டங்களில் பரிசீலிக்கப்பட வேண்டுமென்று எண்ணினால் தலைவர் அனுமதியின் பேரில் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் அது சேர்த்துக் கொள்ளப்படும்.

(e) எல்லாக் கூட்டமும் கடவுள் வாழ்த்துடன் தொடங்கித் தேசிய கீதத்தோடு முடிவடையும்.

## 1. பொறுப்பாளர்

**III. தேர்வு (Elections):—**

1. தலைவர் : The Rev. Ramalingam Devanugraham, B. A., B. T., T. E. L. C. Pudukkottai.
2. துணைத் தலைவர் : ஜனாப் S. R. M. முகம்மது இப்ராகீம், (நிருவாகி, ஹஜனத்துல்சாரியா, உயர் ஆதாரப்பள்ளி, புதுக்கோட்டை.)
3. செயலர் : திரு. தி. சு. மலையப்பன் (ஆசிரிய நிருவாகி, உயர் ஆதாரப்பள்ளி, வீரக்குடி.)
4. துணைச் செயலர் : A. P. S. குமரப்பன், (நிருவாகி, வேகுபட்டி.)
5. பொருளர் : Rev. Fr. P. Showria, (நிருவாகி, ஆலங்குடி )

## 2. உறுப்பினர்

6. Rev. Fr. V. M. Mariyanaygam, (நிருவாகி, கீரனூர்.)
7. திருP. R. M. மெய்யப்ப செட்டியார், (நிருவாகி, விராச்சிலை.)
8. திரு. R. S. சுப்பிரமணியம், (ஆசிரிய நிருவாகி, ராயவரம்.)
9. A. P. வேலுச்சாமி, (நிருவாகி, குப்பக்குடி.)
10. A. K. AR. அருணசலம் செட்டியார், (நிருவாகி, ராயவரம்.)
11. Rev. Fr. S. W. Lobo, (நிருவாகி, இலுப்பூர்.)

## IV. மாநாட்டின் தீர்மானங்கள் :—

1. இச் சங்கம் அரசாங்கத்தாருடன் முழு மனதுடன் ஒத்துழைத்துக் கல்வியின் வளர்ச்சியில் பங்கு பெற முடிவு செய்கிறது.

2. பஞ்சாயத்துச் சட்டம் திருத்தப்பட்டு உதவி பெறும் பள்ளிகளின் நிர்வாகம் முழுவதும் முன்போலவே கல்வி இலாக்காவே ஏற்று நடத்துமாறு வகைசெய்ய வேண்டுமாய் இச்சங்கம் அரசினரைக் கேட்டுக்கொள்கிறது.

3. டீச்சர்-பீப்பிள் ரேஷியோ திருத்தப்பட்டுப் பழைய ஒழுங்கை அநுசரிக்க இச்சங்கம் அரசினரைக் கேட்டுக் கொள்கிறது. தற்சமயம் அமுலிலுள்ள இச்சட்டத்தால் கல்வியின் தரம் குறைவு படுகின்றதென்பதை இச்சங்கம் தெரிவித்துக் கொள்கின்றது.

4. சென்னையிலுள்ள சென்னை மாநிலத் துவக்கப் பள்ளி நிருவாகிகளின் சங்கத்தோடு இச்சங்கத்தை இணைப்பதென்று இச்சங்கம் தீர்மானிக்கிறது.

5. தற்காலிகமாக இச்சங்கத்தைப் புதுக்கோட்டை கீழராஜ வீதி T. E. L. C. பள்ளியில் இயக்குவதென முடிவு செய்கிறது.

6. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள உதவி பெறும் பள்ளிகளின் நிருவாகிகள் அனைவரையும் இச்சங்கத்தின் ஜீவ உறுப்பினராக (Life members) ஆக்க முடிவு செய்கிறது.

## V. மாநாட்டின் முடிவு :—

1. பொறுப்பாளர் யாவரும் உறுதிமொழி செய்து பதவி ஏற்றனர்.
2. Rev. Fr. T. Showriah நன்றி கூறினர்.
3. மாநாட்டிற்கு வந்தவர் அனைவருக்கும் சிற்றுண்டி, தேனீர் வழங்கப்பட்டன.
4. மாநாடு தேசியக் கீதத்தோடு முடிவடைந்தது.
5. இறுதியில் பெருவாரியான உறுப்பினர் சந்தாத் தொகையையும், நன்கொடையையும் அளித்து சங்கத்திற்கு ஆசி கூறினர்.

தி. க. மலையப்பன்,
செயலர்.

இராமலிங்கம் தேவானுக்கிரகம்,
தலைவர்.

# அறிக்கை

1920-ம் ஆண்டு ஆரம்பக் கல்விச் சட்டம் சென்னை அரசாங்கத்தாரால் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தின் கீழ் ஜில்லாவாரியாக (District Educational Councils) ஜில்லாக் கல்விச்சபைகள் நிறுவப்பட்டு, அச்சபைகளுக்கு ஜில்லாவாரியாக ஆசிரியர்கள் நிர்வாகிகள் சங்கம் ஏற்படுத்தி, சங்கத்திற்கு இரண்டு பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டனர்.

இச் சட்டத்தின் விளைவாக மாகாணம் முழுதும் நிர்வாகிகள் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அவைகளை ஒன்றாக இணைத்துச் சென்னை மாநில நிர்வாகிகள் சங்கம் 1922-ல் ஏற்படுத்தப்பட்டது. அதன் முதல் காரியதரிசியே காலஞ்சென்ற திரு. கே. இராமாநுஜம் பிள்ளை ஆவார்கள். அன்று தொட்டு இன்றுவரை சற்றேறக் குறைய 40-ஆண்டுகளாகப் பல ஜில்லா மாநாடுகளையும், மாகாண மாநாடுகளையும் நமது மாநில சங்கம் நடத்தி வந்திருக்கிறது. அம் மாநாடுகளில் தலைசிறந்த தலைவர்களும், அறிஞர்களும், மந்திரிகளும் பங்கு கொண்டுள்ளனர்.

கடைசியாக மிகச் சிறப்பாக நடந்த மாநில மாநாடு சென்னையில் 1957-ல் காலஞ்சென்ற டாக்டர் வரதராஜுலு நாயுடு தலைமை தாங்கியும், பிரதம மந்திரி கனம் திரு. காமராஜ் அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தும் சிறப்பாக நடைபெற்றதாகும். அது சமயம் கல்வி இலாக்கா டைரக்டர் திரு. N. D. சுந்தரவடிவேலு அவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு, மதிய உணவுத் திட்டத்தைப்பற்றி ஆற்றிய சொற்பொழிவு மிகவும் பாராட்டத்தக்கது. அச்சொற்பொழிவின் விளைவாகத்தான் இன்று நமது நாட்டில் மதிய உணவுத் திட்டம் சீரும் சிறப்புமாக ஓங்கிவளர்ந்து வருகிறது.

இப்படி 40 ஆண்டுகளாக உழைத்த நமது சங்கத்தின் நிகழ்ச்சிக் குறிப்புக்களைத் தொகுத்து ஒரு மலராக வெளியிட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். நமது சங்கத்தில் 40 ஆண்டுகளாக உழைத்த உத்தமர்கள் பலர் மறைந்தாலும், சிலர் இன்னும் நம்மோடு இருப்பது மகிழ்ச்சிக் குரிய செய்தி ஆகும். உதாரணமாக சென்னையில் திரு. கே. ராமைய்ய செட்டியார், திரு. N. K. திருமலாச்சாரியார், திருச்சி திரு. சுந்தரராஜ நாயுடு, செம்போடை ரங்கசாமி ஐயங்கார், கும்பகோணம் திரு. இராஜகோபால ஐயர், நெல்லிக்குப்பம் ரெங்கநாத செட்டியார், மதுரை வடுகபட்டி திரு. சங்கரநாராயண பிள்ளை, இராஜபாளையம் திரு. சங்கரநாராயண பிள்ளை, சேலம் நாமக்கல் திரு. வரதைய்யர், வேலூர் திரு. ராமாநுஜ அய்யா, முதலியோர் இன்னும் நமது மாகாண சங்கத்தில் நிர்வாக

உறுப்பினர்களாக இருந்து பணியாற்றி வருகின்றனர். இவர்களைக் கொண்டு நமது சங்கத்தின் பல குறிப்புகளைச் சேகரிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

ஜில்லாவாரியாக அமைக்கப்பட்டுள்ள ஜில்லா சங்கத்தின், தலைவர், காரியதரிசி, மற்ற நிர்வாக உறுப்பினர் இவர்களின் முழு விலாசத்துடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு ஏப்ரல் 30-4-63க்குள் நிர்வாகிகளின் முழு ஜாபிதாவை அனுப்பிவைக்கும்படி ஜில்லா காரிய தரிசிகளை கேட்டுக்கொள்கிறோம்.

மாநாட்டில் கொண்டுவர வேண்டிய முக்கிய தீர்மானங்களைச் சுருக்கமாக எழுதி மாகாண சங்கத்தின் தலைவருக்கு அனுப்பும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

## ஜூன் முதல்வாரத்தில் மாநாடு

12-4-63, மதுரை நிர்வாகிகள் சங்கத்தின் தலைவரும், மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவருமான திரு. பீ. பெருமாள் அவர்கள் சென்னைக்கு வந்தபொழுது மாநாட்டைப்பற்றி விவாதிக்கப்பட்டது. கனம் கல்வி மந்திரியவர்கள் ஜூன்மாதம் முதல் வாரத்தில் நமது மாநாட்டில் கலந்துகொள்வதாகவும், ஜூன் மாதத்தில் நடத்த ஏற்பாடுகள் நடந்துவருவதாகவும் கூறினார். ஆகலின் ஜூன் மாதத்தில் முதல் வாரம் அவசியம் மகாநாடு நடைபெறுமெனத் தெரிகிறது. இம் மாநாட்டு சம்பந்தமாக வருகை இடவசதி, முதலிய விபரங்களைப் பற்றி, வரவேற்புக்குழு பொதுக் காரியதரிசி திரு. J. J. முத்தையா, 136 B. C. நேதாஜி ரோடு, மதுரை-1. என்ற விலாசத்துக்கு எழுதவும்.

P. வீரராகவன்,
தலைவர்.

சென்னை மாநில உதவிபெறும் ஆரம்பப்பள்ளி
நிர்வாகிகள் சங்கம்
சென்னை-1.

*********************************************

# நாற்பத்தைந்து வயதை நெருங்கப் பயமா ?

(ஹேமர் பி. ராகபா, எம்.டி.)

*********************************************

*பொதுவாக ஏறக்குறைய நாற்பத்தைந்து வயதில் உடல் செயல்கள் மெதுவாக வேகம் தணியத் தொடங்குகின்றன. இவ்வுண்மையை உணர்ந்து, அதற்கு ஏற்றவாறு வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும்.*

நாற்பதாவது வயதில் வாழ்க்கை தொடங்குகிறது என்று ஒரு வசனம். இப்படித் தொடங்கும் வாழ்க்கை நாற்பத்தைந்தில் முழுவேகத்துடன் புறப்பட்டு விடுகிறது. அது சரி, நாற்பத்தைந்துக்கு என்ன அப்படி ஒரு மகத்துவம்? முப்பத்தைந்து, நாற்பது இந்த வயதுகளைக்காட்டிலும் நாற்பத்தைந்து எவ்விதத்தில் மாறுபட்டுள்ளது? வாஸ்தவத்தில் மனிதவாழ்க்கையில்ஏதாவது மாற்றம் இப்பொழுதுஉண்மையாகவே நிகழ்கிறதா? இல்லை, அப்படி நினைப்பது வெறும் கற்பனையா? இக் கேள்விக்கெல்லாம் சுருக்கமான பதில் மாற்றம் உண்டு என்பதே இந்த மாற்றம் திடீரென்று வந்து விட்ட மாற்றம் அன்று. மெதுவாக ஊர்ந்து வந்த ஒரு மாற்றம். நாற்பத்தைந்தை எட்டும் போது, பெண்கள் மாட்டு நிகழும் திங்கள் தீட்டு நின்று போவது ஒன்றைத் தவிர, இதர மாற்றங்கள் அனைத்தும் மெதுவாக, படிப்படியாக வருபவைதான்.

நாற்பத்தைந்தில், 'நாற்பதில் இருந்த மாதிரி நம்மால் இருக்க முடியாது. நாம் விரும்பாவிட்டாலும், மாற்றங்கள் வரத்தான் செய்கின்றன. நம் நோக்கில் ஒரு மாற்றம் நிகழ்கிறது. வெறுப்பு வேட்கைகளில் ஒரு மாற்றம். பத்து வருஷத்துக்கு முன்பு பிடித்தமாய் இருந்த வேடிக்கை, கேளிக்கைகள் இப்பொழுது அத்தனை சுவாரஸ்யமாய் இருப்பதில்லை. வேறு வகைப்பட்ட வேடிக்கை, 'கேளிக்கைகள் வந்து புகுந்துவிட்டன. நமது போக்கும் நோக்கும் மாறிவிட்டன.

இந்த மாற்றத்துக்குக் காரணம்? உடம்பில் உள்ள சுரப்பிகளின் போக்குத் தான். உயிர்ச்சத்துக்களைப் போன்று அதிகமான ஆராய்ச்சிக்கு இன்று உட்படுத்தப்பட்டுள்ளவை தூம்பறு சுரப்பிகள். இவற்றைப் பற்றி நிறைய அறிகிறோம். கருப்பையில் உருவாகி வளர்ந்து வரும் சிசுக்களின் பாலை நிர்ணயிப்பது இந்த விசித்திரமான சுரப்பிகளின் நீர்தான் என்பது கிட்டத்தட்ட அனைவரும் அறிந்த விஷயம். டெஸ்டாஸ்டெரோன் (Testosterone) அதிகம் இருந்தால் ஆண்குழந்தை,எஸ்ட்ரோன்

(Estrone) அதிகம் இருந்தால் பெண் குழந்தை என்று தெரியும். இன விருத்திக்கான சுரப்பிகளுக்கும் தலையில் உள்ள பிட்யூடரி, கழுத்தில் உள்ள தைராய்டு, இன்னும் தேகத்தின் இதர பாகத்தில் இருக்கும் சுரப்பிகள் இவைகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது.

இந்த மாயச் சுரப்பிகளின் அமைப்பும் இயக்கமும்தான் நம் நிலைமையை நிர்ணயிக்கின்றன. பருவம் வந்தவர்களின் தனித்த போக்கு, பதினெட்டு வயது வாலிபனின் அடங்காத வேகப் பாய்ச்சல், இருபது வயது மங்கையின் நெஞ்சில் இதழ் விரியும் தாய்மை உணர்ச்சி, திங்கள் திட்டு நிற்கும் போது பெண்களுக்கு உண்டாகும் நரம்புக் கோளாறுகள் — இவை யெல்லாம் சுரப்பிகளின் வேலைதான்.

மானிட வாழ்வில் இருபதிலிருந்து நாற்பது வயது வரை உள்ள காலத்தை இனப் பெருக்கத்துக்கான காலம் என்று அழைக்கலாம். இக் காலத்தில் இனப் பெருக்கச் சுரப்பிகள் மும்முரமாய் வேலை செய்கின்றன. அதனால் தேகத்தின் இதர திசுக்களும்பாதிக்கப்படுகின்றன. நாற்பதுக்குப் பிறகு ஆணின் இனப் பெருக்கச் சுரப்பிகள் வேகம் தணிந்து, மந்தப்பட்டுப் போகின்றன. பெண்ணிடம் இவைகள் அறவே ஓய்ந்துவிடுகின்றன. நாற்பத்தைந்தில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்குச் சரீர சம்பந்தப்பட்ட காரணம் இதுதான். இனப் பெருக்கச் செயலுக்கும் மன ஆற்றலுக்கும் உள்ள தொடர்பைக் குறித்து டாக்டர் அலெக்சிஸ் காரெல் தம் புத்தகம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இனப் பெருக்கச் செயலில் மிதமிஞ்சி ஈடுபட்டால், மனத்தின் உன்னத ஆற்றல்கள் குறைந்துபோகும் என்று இவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

நாற்பத்தைந்தில் நமது தேகத்தில் உண்டாகும் வேறு சில மாற்றங்களைக் கவனிக்கலாம். இளமையில் இருந்தது போல், தசைநார்கள் வலுவும் இளக்கமுமாக இருப்பதில்லை. கண்ணுக்குத் தெரியும்படியான தசைநார்கள் மட்டும் அன்று; தேகத்துக்குள்ளே இருக்கும் இருதயத்தின் தசைநார்கள், இரத்த நாளங்களின் சுவர்த் தசைநார்கள் இவைகளுக்கும் இந்த வார்த்தை பொருந்தும். கண்ணுக்குள்ளே இருக்கும் விழி கண்ணாடிகள் சுருங்கி விரியும் ஆற்றலை ஓரளவுக்கு இழந்துவிடுகின்றன. அதனால் கண்ணாடி போட்டுக்கொள்ளும் அவசியம் உண்டாய்விடுகிறது. வாய்த் திசுக்கள் கூட காலக் கொடுமையைக் காட்டத் தொடங்குகின்றன: பல்லில் சொத்தை விழுகிறது. சீழ்ப் பல் உண்டாகிறது. அது காரணமாகப் பற்கள் இந்த வயதிலேயே விழத் தொடங்குகின்றன. கொழுப்பு தங்கும் திசுக்களில் ஒரு மாற்றம். இடுப்பைச் சுற்றி

இவைகள் அதிகமாக வளர முற்படுகின்றன.

இந்த வயசில்தான் பெண்களுக்குத் திங்கள் தீட்டு நின்று போய், இனப் பெருக்கச் சக்தியும் மடிந்துவிடுகிறது. தீட்டு நின்றதும், சில நரம்புக் கோளாறுகள் தலைகாட்டுகின்றன. இக் கோளாறுகளில் **பெரும்பாலானவை மனக்கோளாறு காரணமாகப் பிறப்பவை.** வயது வந்த பெண்மணிகள் சிறு பெண்களுக்கு என்னத்தையோ சொல்லி, தீட்டு விலக்கு என்பது ஓர் ஆபத்து என்று எண்ணத் தூண்டும் அச்சத்தையும் கலவரத்தையும் அவர்கள் நெஞ்சில் புகுத்தி விடுகிறார்கள். இது மகா மோசமான காரியம். ஏனென்றால், சாதாரண ஆரோக்கியம் படைத்த ஒரு பெண்மணிக்கு இதனால் எந்தக் கஷ்டமும் உண்டாவதில்லை.

நாற்பத்தைந்தில் உண்டாகும் மாற்றங்கள் குறித்து விஸ்தாரமாய் எழுத இங்கு இடம் இல்லை. இருந்தாலும், ஒன்றைச் சொன்னால் போதுமானது. உடல் இயக்கங்கள் இந்த வயசில் மெதுவாக வேகம் அடங்கித் தணியத் தொடங்குகின்றன. இவ்வுண்மையை நன்குணர்ந்து, அதற்கேற்றவாறு வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக்கொள்வது நாற்பத்தைந்தை எட்டிவிட்ட ஒவ்வொருவரும் அவசியம் செய்ய வேண்டிய காரியம். வன்மையான விளையாட்டுகள், கசரத்துக்கள் இவற்றை விட்டுவிட்டு, இலேசானவைகளை மேற்கொள்ள வேண்டும். உடம்பை அடிக்கடி பரிசோதனைக்கு உட்படுத்தி, ஆரோக்கியத்தைக் கண்காணிக்க வேண்டும். இரத்த அழுத்தம், இருதயம், சுவாசகோசம், இரத்தம், சிறுநீர் இவற்றைச் சோதித்து, தேக நிலையை உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த வயதில் இரத்த நாடிகள் இறுகிக் கெட்டிப் படலாம்; சிறுநீர்ப்பிரித்திகள் பழுதுறலாம்; இருதயத்தைச் சில கோளாறுகள் பற்றலாம்; இரத்த அழுத்த ஏற்றம் உண்டாகலாம். இவை குறித்தெல்லாம் கவனமாக இருக்கவேண்டும்.

உடல் இயக்கங்கள் வேகம் அடங்கி மந்தப்பட்டுப் போவதால், தேவைக் குறைவைக் கருதி, ஆகாரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். சிறப்பாக, சத்துள்ள ஆகாரங்கள் விஷயத்தில் கட்டுப்பாடு மிக்க அவசியம். காரசாரமான, சத்து நிறைந்த ஆகாரத்தை மிதமிஞ்சி உண்பது தான் இந்த வயசில் சர்வ சாதாரணமாக உண்டாகும் அழி நோய்களுக்கெல்லாம் முக்கிய காரணம் என்று கருத வேண்டியிருக்கிறது.

இந்த வயதில் பெருந் தீங்கு விளைவிக்கும் இன்னொரு சங்கதி புகையிலை, மதுபானப் பழக்கம். வாழ்வின் இப் பகுதியில் தான் பாரமான பொறுப்புக்கள் பெரும் சுமையாய் வந்து தோளில் அமர்

கின்றன. விவகாரம் அவ்வப்பொழுது நெருக்கி அழுத்தும். அப்பொழுதெல்லாம் இன்னொரு சிகரெட்டு எங்கே என்று நாடி, அதனைக் கைப்பற்றித் தம் மனச் சுமையைக் குறைக்கப் பார்க்கிறார் சிகரெட்டுக்குப் பழக்கப் பட்ட நபர். நரம்பில் பாரம் அழுத்த அழுத்த, சிகரெட்டின் எண்ணிக்கை எகிறிக்கொண்டே போகும். இந்தச் சிகரெட் பழக்கத்தை விடப் பெருந் தீங்கு விளைவிப்பது குடிப் பழக்கம். குடியில் மூழ்கி, வாழ்க்கையைச் சீரழித்துக் கொண்டவர்கள் எத்தனையோ பேர்கள். இவர்கள் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்துகொண்டே போகிறது!

தொழில் நடத்தும் மருத்துவருக்கு இந்த அனுபவம் சர்வ சாதாரணம்: ஒரு வாலிபன் வயது முப்பதாகிறது. வாட்ட சாட்டமான தேகம்; நல்ல ஆரோக்கியம்; திடமான காத்திரம். பார்க்கிற வேலையோ பொறுப்பான வேலை. இவன் புகை பிடிக்கிறான். சமுதாயம் அது, இது என்பதற்காகச் சிற்சில சமயம் குடியும் குடிக்கிறான். நாளாவட்டத்தில் பொறுப்புக்கள் வளர்கின்றன. நரம்பை வந்து தாக்கும் வேகத்தைச் சமாளிக்க அதிகம் புகைக்கிறான்; இன்னும் அதிகம் குடிக்கிறான். விளைவு? நாற்பத்தைந்து எட்டும் போது, ஆசாமியின் முகவெட்டு மாறிவிடுகிறது. தேக ஆரோக்கியம் தளர்ந்துவிடுகிறது. திரண்டு உருண்டு, வலிமையின் உருவாகக் காட்சி தந்த கரங்களையோ, கால்களையோ இப்பொழுது காண முடிவதில்லை. அவைகள் மெலிந்து, தளர்ந்துவிட்டன. முகம் வடிவிழந்து உப்பிக் கிடக்கிறது. கண் இமைகள் காற்றுப் பை மாதிரி காட்சி வழங்குகின்றன. வயிறு நிரம்பப் பெருத்துவிட்டது. இத்தோடு நின்றதா? இவைகள் எல்லாம் இருந்தால் நரம்புத் தளர்ச்சியும் கூடவே இருக்கும் பெரும்பாலும்.

இது தான் நியதியா? அல்ல; அப்படி ஒன்றும் கிடையாது. விரும்பினால், இந்த நாற்பத்தைந்திலும் பூரண ஆரோக்கியத்துடன் வாழலாம். இந்த வயதில் மிகுந்த தேக சுகத்தோடும் நிறைந்த மனச் சந்துஷ்டியோடும் வாழ இயலும். ஆரோக்கியமாக வாழ்வது எத்தனை லாபகரமானது! இந்த வயதில் தான் நேரத்துக்குப் பெரு மதிப்பு; முன் இருந்ததைவிடப் பெரிய மதிப்பு. வியாபாரமோ இல்லை, வேறு துறையோ, நாற்பத்தைந்திலிருந்து ஐம்பத்தைந்து வரை உள்ள காலம்தான் ஆக்கத்துக்குரிய படைப்புக் காலம். இப்பொழுது நோயும் நொடியும் படையாய் வந்துவிட்டால், நேரம் வீணாகிவிடும். நேரம் பாழானால், செல்வம் பாழான கணக்குத் தான்.

நாற்பத்தைந்தில் திட்டவட்டமானதோர் ஆரோக்கியத் திட்டம் ஒவ்வொருவருக்கும் இருத்தல் அவசியம். இது மாதிரி

திட்டத்தில் கீழ்க்கண்ட விஷயங்கள் முக்கியமாய் இடம் பெற வேண்டும்:

1. செய்கிற வேலைக்கும் தேகவாகுக்கும் ஒத்துக்கொள்ளும்படியான உணவு. தினம் எதைச் சாப்பிடலாம் என்று ஆலோசனை கூற வல்லாரின் உதவியை நாடுவது உத்தமம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான உணவு தேவை என்பது கூறாமலே அமையும்.

2. **வேலையினின்றும்** ஓய்வு. ஓய்வு கொள்வது என்பது ஒரு தனிக் கலை. இக் கலையை முயன்று பயில வேண்டும். படுக்கையில் நீட்டிக் கிடந்தால் மட்டும் ஓய்வாகிவிடாது. நாற்காலியோடு ஒட்டிக்கொண்டு வேலை செய்பவர்களுக்கும், மூளையைக் கொண்டே உழைப்பவர்களுக்கும் திறந்த வெளி உடற் பிரயாசை நல்ல ஓய்வு தான். தூய காற்றும், கதிரவனின் பொன் ஒளியும் ஆரோக்கியம் வழங்கும் வள்ளல்கள். இவற்றை அலட்சியப்படுத்தலாகாது.

3. எதிலும் எல்லை மீறாத ஒரு நிதானம்.

4. அவ்வப்பொழுது திறமை வாய்ந்த மருத்துவரைக் கொண்டு தேக நிலையைச் சோதித்துக் கொள்வது.

நோய்த் தடுப்பு விஷயத்தில் சாமர்த்தியமாக இருக்க வேண்டும். இயற்கையின் சாதாரண விதி நியதிகளை அனுசரித்தால் மட்டும் போதாது. வயது முற்றிய இந்தக் காலத்தில் நோய்த் தடுப்பு முறைகளைப் பற்றி யெல்லாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். உயிர்ச் சத்துக் குறைவு வியாதிக்கு வழிவகுக்கிறது என்பதை நாம் இன்று அறிவோம். எனவே, ஐ வகை உயிர்ச்சத்துக்களும் கொண்ட மாத்திரையைக் கிரமமாகச் சாப்பிட்டு வருவதால், வியாதிகள் வாராமல் தடுக்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் உயிர்ச்சத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து விடும். அதற்கேற்றவாறு அப்பொழுது சாப்பிடவேண்டும்.

தீட்டு நின்று போகும் காலத்தில் மாதர்கள் வேண்டாத நரம்புச் சுமைகளைத் தவிர்க்க அவசியம் முயல வேண்டும். ஏதாவது ஒன்று வந்துவிட்டால், உடனே அதனை ஊதிப் பெரிதாக்கிவிடும் வழக்கம் பெண்கள்பால் உண்டு. ஆஸ்த்மா வந்துவிட்டால், இல்லை, தலைவலியும் காய்ச்சலுமாக வந்துவிட்டால், "ஆகா, ஊஹு" என்று ஒரே அமர்க்களப்படுத்தி விடுகிறார்கள். இது கூடாது. இந்தக் காலத்தில் இரத்த அழுத்த ஏற்றம் சில சமயம் உண்டாகலாம். அதற்காக அலட்டிக் கொள்ளலாகாது. இவையெல்லாம் கொஞ்ச நாளில் விலகிவிடும். இவ்விஷயத்திலும் வீட்டு மருத்துவர் ஆலோசனை பெரிதும் பயன் தரலாம். இரத்தத்தின் வேகப் பாய்ச்சலையும் இதர நரம்புக் கோளாறுகளையும் குணப்படுத்த மருந்துகள் இருக்கின்றன. இப்பொழுது தொட்டு

உடம்பை அடிக்கடி மருத்துவ ரிடம் காட்டிச் சோதனை செய்து கொள்ள வேண்டும். மார்பிலோ, வயிற்றிலோ புற்று நோய் காண இருந்தால், அதனைக் கண்டு பிடித்து, ஆவன செய்து விடலாம். திங்கள் தீட்டு நின்ற பின்னர் பெண் மக்கள் ஆரோக்கியம் முன்னைக் காட்டிலும் நன்றாய் இருக்கும்.

திரும்பவும் கூறுகிறோம்: இந்த வயதுதான் சந்தோஷமான வயது; நெஞ்சுக்கு நிறைவை அளிக்கத்தக்க வயது. நல்ல ஆரோக்கியம் இப்பொழுது தான் உண்டு. வயிற்றிலும் குடலிலும் சுவாசக் கருவிகளிலும் பிறக்கின்ற வியாதிகள் இந்தக் காலத்தில் அவ்வளவு அதிகமாகத் தோன்றா, தோன்றினாலும், முன் மாதிரி அத்தனை உபத்திரவம் தரமாட்டா. வாலிபவேகமும், வன்மையான ஈடுபாடும் இந்த வயதில் சாத்தியமில்லை தான். எனினும், வன்மைக் குறைவான காரியங்களை முன் மாதிரியே தாக்குப் பிடித்துக்கொண்டு செய்ய முடியும். இந்த நாற்பத்தைந்தாம் வயதில் தனக்கு இருக்கிற பலம் இத்தனை தான் என்று தெரிந்திருப்பதாலும், சக்தியை வீணடிக்காமல் முழுதும் பயன்படுத்தும் முறையை உணர்ந்திருப்பதாலும், தாக்குப் பிடித்துக் காரியங்களை முன்னைக்காட்டிலும் செவ்வனே செய்ய முடிகிறது.

இந்த வயதில் தான் கலாசாரத் துறையிலும் சிந்தனைத் துறையிலும் நிறையச் சாதிக்க முடியும். எத்துறையில் ஈடுபட்டிருப்பினும், சிந்தனையாளன் தன்னுடைய நாற்பத்தைந்தாவது வயதிலும் அதன் பின்னரும் தான் பென்னம்பெருத்த சாதனைகளைச் சாதிக்கிறான். விளக்கத்துக்கு, விமான உற்பத்தியை எடுத்துக் கொள்ளலாம். இதற்குச் சொல்லுவது எனைய பெரும் தொழில்களுக்கும் பொருந்தும். இத்துறையில், வாலிபர்கள் மாமூலான சாதாரண காரியங்கள் செய்ய, மோட்டார்களும் இதர நுண்ணிய அமைப்புக் கொண்ட பாகங்களும் தயாராகும் பகுதியில் வயதில் மூத்து முதிர்ந்து அனுபவப்பட்டவர்களே வேலை செய்கிறார்கள்.

இலக்கியம், கலை, இசை, சட்டம், அரசியல் — இந்தத் துறைகளை எடுத்துக்கொண்டாலும் மேலே சொன்ன கதை தான். நாற்பத்தைந்தில் மானிட வாழ்வு நன்றாகத் தொடங்கிவிடுகிறது. அரசாங்க அலுவலகங்களில் உயர்ந்த பதவி வகிப்பவர்கள் அந்தப் பதவிக்கு வந்த காலத்தில் நாற்பத்தைந்தைக் கடந்தவர்களாகத்தான் இருந்தார்கள் என்பது அனுபவத்தில் காணும் ஒரு விசேஷம். வாஸ்தவம்; இதற்கு முன்னால் உள்ள நாற்பத்தைந்து ஆண்டுகளும் பிறகு நிகழ இருக்கும் வாழ்வின் தொண்டுக்கான தயாரிப்புக் காலம்தான். டபிபென் எஸ்ரா இந்த உண்மையை எவ்வாறு சொல்லுகிறார், பாருங்கள்: (36—ம் பக்கம் பார்க்க)

# தெரியுமா?

(துரை. முருகேசன்)

பிறவித்துன்பம் நீங்கி வீடுபேறு பெறும்வரை மனிதன் வீடுகளில் தன் காலத்தின் பெரும் பகுதியைக் கழிக்கின்றான். ஆனால், வீடு என்பது என்ன? அதிலுள்ள கலை நுணுக்கங்கள் யாவை? என அறிய முயல்கிறானா?... கலையுள்ளம் படைத்தவர்களே கலை இன்பத்தை அனுபவிக்கின்றார்கள். கலைகளில் பலவகை. அதில் கட்டடக்கலையும் ஒன்று. பரந்த நம் இந்திய நாட்டில் காணப்படும் கட்டடங்களை மூன்று வகையாகப் பிரித்திருக்கின்றார்கள். அவை: (1) நாகரம். (2) வேசரம். (3) திராவிடம்.

அடிமுதல் முடிவரை நான்கு சதுரமாக அமைக்கப்படும் கட்டடங்கள் "நாகரம்" எனப்படும். தரை, கட்டடம், கூரை அமைப்பு—இவை ஒன்றில் ஏதாவது ஒன்று வட்டவடிவமாகவோ அல்லது நீண்ட அரை வட்டவடிவமாகவோ இருப்பது "வேசரம்" எனப்படும். இக்கட்டடக்கலை பௌத்தர்களால் வளர்ச்சியுற்றது என்பர். தென்னிந்தியாவிலுள்ள — இனிய தமிழையும் இறைவன் புகழையும் வளர்த்த மன்னர்களால் என்றும் அழியாவண்ணம் எழிலோடு கட்டப்பட்ட ஆலயக் கட்டடங்கள் "திராவிடம்" என்ற வகையைச் சாரும்.

யாவர்க்கும் மேலானவனாகவும், அளவிலாச் சீருடையானும் இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும் துன்பந் தொடர் வறுத்துச் சோதியாய் விளங்கிடும் இறைவனுக்கு மக்கள் மனக்கோயில் மட்டுமல்லாமல் என்றும் அவன் நினைவு நீங்காவண்ணம் இறைவழிபாடு நன்முறையில் நடைபெற ஆண்டவனுக்கு ஆலயங்கள் பலவற்றைக் கட்டினர். கட்டடக்கலையில் கோயிற் கட்டடக் கலையும் ஒருவகைப்படும். கோயில்கள் கரக்கோயில், மாடக்கோயில், ஞாழற்கோயில், இளங்கோயில், கொகுடிக்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் எனப் பலவாறாகப் பகுக்கப்பட்டுள்ளன.

வட்டமான விமான அமைப்பினை உடையதை "கரக்கோயில்" என்பர்; மாடியுடையதுபோலமைந்த கோயில்களை "மாடக்கோயில்" என்பர். "ஞாழற்கோயில்" என்பது குங்கும மரத்தால் கட்டப்பட்டதாம். நான்கு பட்டையான விமானத்தையுடையது இளங்கோயில் என்றும், முருகன் கோயிலே இளங்கோயில் என்றும் கூறுவாருமுளர். கொகுடி என்னும் மரத்தினால் அமைக்கப்பட்டது

கொகுடிக்கோயில். ஆறு அல்லது எட்டுப பட்டையான சிகரங்களை யுடைய கோயில்கள் மணிக்கோயில்கள் எனப்படும். யானையின் முதுகைப் போலக் கோயிலின் கூரை அமையப்பெற்றிருந்தால் அக் கோயில்கள் "ஆலக்கோயில்" எனப்படும் என்பர்.

சிற்பக்கலையில் சிறந்தோங்குவது சித்தன்னவாசல் ஓவியங்கள். அவை நம் பண்டைக்காலச் சிற்பக்கலைக்குச் சிறந்தமோர் எடுத்துக் காட்டாய் விளங்குபவை. பழுதடைந்த அந்த ஓவியங்களை முதன் முதல் கண்டுபிடித்தவர் புதுவை அறிஞர் "மூவோ துப்ரெய்" என் பவர். இவர் 1920-ஆம் ஆண்டில் ஒப்பற்ற ஓவியங்களை முதன் முதல்ாகக் கண்டு வெளி உலகிற்கு அறிவித்தார்.

* * *

இந்தக் காயை நீங்கள் பல இடங்களில் பார்த்திருக்கலாம். முக்கியமான நாட்களில் இக்காய் முக்கியமாய் இடம் பெறும். என்ன காய்? "துவர்க்காய்"-"பழுக்காய்"—இது என்ன காய் !?... பெயர்தான் மாறிவிட்டது. வேறு ஒன்றுமில்லை. துவர்ப்பான சுவையுடையதால் பாக்கைத் "துவர்க்காய்" என்றும், பழுத்த பாக்கைப் "பழுக்காய்" என்றும் கூறுவர்.

* * *

தூக்கணாங்குருவி, நெய்தற்பறவை, ஏளனப்பறவை, நகைக்கும் பறவை, ஊர்க்குருவி, வானம்பாடி, உங்காரப்பறவை-இவைகள் வெவ் வேறு விதமான பறவைகளல்ல. இவை யாவும் சிட்டுக்குருவி இனத் தைச் சேர்ந்தவையாகும்.

* * *

கங்காருக் குட்டிகள் பிறக்கும் பொழுது சுமார் இரண்டு அங்குல நீளமே இருக்குமாம்.

* * *

நயாகரா அருவியின் கரையில் "மான்செஸ்டர்" என்ற ஊர் இருக்கிறதல்லவா ? அதை 1806-ல் "போர்ட்டர்" என்ற நீதிபதி ஒருவர் ஏற்படுத்தினார்.

* * *

முதன் முதலில் எஸ்கிமோக்களைக் கண்டவரும், உலகத்தின் வடமுனைக்கு ஆகாய விமானம் மூலம் சென்றவரும், உலகின் வட முனை, தென்முனை இரண்டையும் கண்டறிந்தவரும் யார் தெரியுமா? நார்வே நாட்டைச் சேர்ந்த "ரோவால்ட் அமண்சன்" என்பவர். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த இவர் வடமுனை நோக்கி நண்பரைத் தேடப் போனவர் வரவேயில்லை.

# ஆரம்ப ஆசிரியர்களுக்கு விருதுகள்

---

## கவர்னர் மேதி அளித்தார்

47 ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கவர்னர் திரு. விஷ்ணுராம்மேதி 30-3-63 அன்று விருதுகளை அளித்தார்.

200 ரூபாய்க்குப் பரிசுப் பத்திரங்களும் நற்சான்றிதழும் வெள்ளிப் பதக்கமும் வழங்கப்பட்டன.

ஆசிரியைகள் உட்பட 3 ஆசிரியர்கள் தங்களுக்குக் கிடைத்த 200 ரூபாய் பரிசுப் பத்திரங்களில் நூறு ரூபாய் மதிப்புள்ள பத்திரங்களைப் பாதுகாப்பு நிதிக்காகக், கவர்னரிடம் அளித்துப் பாராட்டுதலைப் பெற்றனர்.

ஒருவர் தமது மாத சம்பளமான ரூ. 101-ஐப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்தார்.

47 ஆசிரியர்கள் (4 ஆசிரியைகள் உட்பட) விருதுகளைப் பெற்றனர். ஒருவர் வரவில்லை. ஆசிரியர்களின் கல்விச் சேவை, மதிய உணவுத் திட்டத்தில் ஈடுபாடு, பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளை நடத்துவது போன்ற சாதனைகள் பாராட்டுரைகளாகப் படிக்கப்பட்டன. பாராட்டுப் பெற்றவர்களில் ஒருவர் 40 ஆண்டுகள் ஆசிரிய சேவை செய்தவர்.

ராஜாஜி மண்டபத்தில் நடந்த விருது அளிப்பு விழாவுக்கு முதல் அமைச்சர் திரு. காமராஜ் தலைமை வகித்தார்.

### ஒரு லட்சம் ஆரம்ப ஆசிரியர்கள்

கல்வி அமைச்சர் திரு. பக்தவத்சலம் வரவேற்றுப் பேசுகையில் கட்டாயமாகச் சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்ப சட்டமேற்பட்ட காலம் போய் தற்போது மக்களுக்கே ஆர்வம் ஏற்பட்டுள்ளது என்றார். 39 லட்சம் குழந்தைகள் 28,000 ஆரம்பப் பள்ளிகள், ஒரு லட்சம் ஆரம்ப ஆசிரியர்கள் தமிழ்நாட்டில் இருப்பதாக மந்திரி சொன்னார். பெற்றோரை விட உற்சாகத்துடன் பிள்ளைகளை ஆசிரியர்கள் கவனித்து வருவதாக மந்திரி பாராட்டினார்.

முதலமைச்சர் திரு. காமராஜ் பேசுகையில் பள்ளியில்லாத கிராமங்களே இனி இருக்காது என்று அறிவித்தார். வறுமையின் காரணமாகவும், சிறிதளவாவது சம்பாதிக்கட்டுமே என்ற காரணத்துக்காகவும் பிள்ளைகள் பள்ளிக்கு வராமல் இருந்தனர். தற்போது நிலைமை மாறி வருகிறது. பள்ளிக்கு வரும் பிள்ளைகள் எந்தச் சூழ்நிலையிலிருந்து வருகிறார்கள் என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும்.

வசதியுள்ளோர் பிள்ளைகள் போல வசதியில்லாதார் பிள்ளைகளும் சரிசமமாக இருக்க ஆசிரியர்கள் சிரத்தை எடுத்துச் சம

*வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று திரு. காமராஜ் சொன்னார்.*

*ஆசிரியர்களுக்கு உற்சாகம் ஊட்டவும் புதிதாக ஆசிரியத் தொழில் புரிய வருவோருக்கு ஊக்கமளிக்கவும் விருதுகள் பயன்படுமென கவர்னர் கூறினார்.*

*பகலுணவுத் திட்ட மூலம் கல்வியைப் பெருமளவுக்குப் பரப்பி மற்றமாநிலங்களுக்குத்தமிழ்நாடு வழிகாட்டியாக உள்ளதென அவர் சொன்னார்.*

*பரிசு பெற்ற ஆசிரியர்கள் சார்பில் திரு. துளசிங்கம் நன்றி தெரிவித்தார்.*

*விழாவுக்கு வந்தவர்களுக்குக் கல்வி இலாகா செயலாளர் நன்றி கூறினார்.*

*திருமதி நேசமணியம்மாள் (ஒரத்தநாடு) திரு. மதுசூதன ராவ் (கன்யாகுமரி), திருமதி செல்லம்மாள் (கன்னியாகுமரி) ஆகியோர் 100 ரூபாய் பரிசுப் பத்திரங்களைப் பாதுகாப்பு நிதிக்கு அளித்தனர்.*

*நீலகிரியைச் சேர்ந்த திரு. சிரங்கி கவுண்டர் தமது ஒரு மாத சம்பளமான 101 ரூபாயைக் கவர்னரிடம் கொடுத்தார்.*

★


**" ஆரம்பக்கல்வி " ஆபீஸ்.**

**94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
*(ஆங்கிலம்) 100 ரூ. 3-50*

ரிக்கார்ட் ஷீட்டுகள்
*(ஆங்கிலம்) 100 ரூ. 2-50*

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
*(ஆங்கிலம்) 100 ரூ. 2-50*

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
*(ஆங்கிலம்) 100 ரூ. 1-25*

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
*(ஆங்கிலம்) 100 ரூ. 2-50*

Form of Certificate of Income

வருமான நற்சாட்சிப் பாரங்கள்
*(ஆங்கிலம்) 10 ரூ. 2-50.*

தபால் செலவு பிரத்யேகம்

**முக்கிய அறிவிப்பு**

Book Post-ல் *பாரங்களை அனுப்ப தபால் செலவு :*

*25 பாரங்களுக்கு 14* nP.
*50 பாரங்களுக்கு 26* nP.
*75 பாரங்களுக்கு 41* nP.
*100 பாரங்களுக்கு 50* nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# தேசியக் கடன் உபகாரச் சம்பளத் திட்ட விதிமுறைகள்

## 1963-64-ல் மொத்தம் 18100 மாணவர்களுக்குக் கிடைக்கும்

தேசியக் கடன் உபகாரச் சம்பளத் திட்டத்தின் விதிமுறைகளைக் கல்வி இலாகா தற்போது இறுதியாக்கியிருக்கிறது. தேவையும், தகுதியும் உள்ள சுமார் 66,900 மாணவர்களுக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மீதமுள்ள வருடங்களில் நிதி உதவி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்துக்காக ரூ. 9 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திட்டத்தை அமலாக்குவதற்கான கொள்கையையும், விதிமுறைகளையும் வகுப்பதில் கல்வி இலாகாவுக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்ட தேசிய ஆலோசனைபோர்டு விதிகளை அங்கீகரித்துள்ளது. இவை ராஜ்ய சர்க்கார்களுக்கு அனுப்பப்படுகின்றன.

திட்ட அமலிலும், மாணவர்களைப் பொறுக்குவதிலும், உதவும் பொருட்டு இத்தகைய ஆலோசனை போர்டுகளை அமைக்குமாறு ராஜ்ய சர்க்கார்களுக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

1963 - 64-ல் அளிக்கப்படவிருக்கும் கடன் உபகாரச் சம்பளங்களின் மொத்த எண்ணிக்கை பட்டப்படிப்புக் கீழ்க் கட்டத்தில் 16 ஆயிரமும், மேல் பட்டப் படிப்பில் 2 ஆயிரமும், எம். ஏ., எம். எஸ். ஸி. கட்டத்துக்குப் பின் 100-ம் இருக்கும். அதாவது மொத்தம் 18100.

1964-65-ல் 20000, 2200, 100, (மொத்தம் 22300)-ம், 1965-66-ல் 24000, 2400, 100 (மொத்தம் 26500)-ம் உபகாரச் சம்பளங்கள் வழங்கப் படும்.

தகுதியுள்ள ஏழை மாணவர்கள் வட்டியில்லாத கடன் மூலம் தங்களது படிப்பைப் பூர்த்தி செய்வதற்கு உதவுவதே இத்திட்டத்தின் நோக்கம். ஆசிரியர் தொழிலைப் புத்தி கூர்மையுள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்க ஊக்கமளிக்கவும் திட்டம் வகை செய்கிறது. இத் தொழிலைத் தேர்ந்தெடுப்பவர்கள் தங்களது படிப்பைப் பூர்த்திசெய்த பின்னர், கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தேவையில்லை. அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படும்

எனினும், தேசிய உபகாரச் சம்பளத்தின் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே உபகாரச் சம்பளங்களைப் பெறும் மாணவர்களுக்கு

இத்திட்டம் பொருந்தாது. மத்ய, ராஜ்ய சர்க்கார்கள் அல்லது சர்வ கலாசாலைகள், தனியார் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உபகாரச் சம்பளத் திட்டத்தின் கீழ் உதவி பெறும் மாணவர்களுக்கும் இது பொருந்தாது. முழு நேர உத்யோகத்தில் உள்ளவர்களுக்கும், மாலை நேரக்கல்லூரிகளின் மூலம் அல்லது தபால் மூலம் தங்களது படிப்பைத் தொடர விரும்புவோருக்கும் இத்தகைய கடனுதவி கிடைக்காது.

இந்தியாவில் படிப்பதற்கு மட்டுமே கடன் உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும். மெட்ரிகுலேஷன் அல்லது எஸ். எஸ். எல். ஸி. கட்டத்துக்குப் பின் கல்வி போர்டு அல்லது சர்வகலாசாலை, அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்விக் குழு நடத்தும் சில குறிப்பிட்ட பரீட்சைகளின் முடிவு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட முழு நேரப் படிப்புக்கும், பயிற்சிக்கும் கடன் உபகாரச் சம்பளங்கள் தரப்படும்.

பல்வேறு கல்விக் கட்டங்களில் ஒவ்வொரு ராஜ்யத்திலும், மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படும் அடிப்படையில் உபகாரச் சம்பளங்கள் ராஜ்யங்களிடையேயும், யூனியன் பிரதேசங்களிடையேயும் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

கீழ்பட்டப்படிப்பு, மேல் பட்டப் படிப்பு, எம். ஏ., எம். எஸ்ஸிக்கு மேல் கட்டம் ஆகியவற்றுக்குத் தகுதி பெறும் பரீட்சைகளில் உதவி பெறும் வருடத்தில் தேறியிருக்க வேண்டும். மொத்தத்தில் 60 சத விகிதத்துக்குக் குறையாத மார்க் இருக்க வேண்டும். பெற்றோர்கள் அல்லது கார்டியன்களுக்கு மொத்த வருட வருமானம் ரூ. 6 ஆயிரத்துக்கு அதிகப்படலாகாது. இத்தகைய மாணவருக்கே கடன் உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

முந்தைய வருடத்தில் தேறி, ஆனால் பண வசதியில்லாமல் படிப்பைத் தொடர முடியாது இருக்கும் மாணவர்களுக்காக 1963–64–ல் 15 சதவிகிதம் வரை உபகாரச் சம்பளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

கலை, விஞ்ஞானம், காமர்ஸ், எஞ்சினியரிங், டெக்னலஜி, வைத்தியம், விவசாயம், சட்டம், கல்வி ஆகிய துறைகளில் முழு நேரப் படிப்புக்குக் கடன் உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

வருடத்துக்கு ரூ. 720–லிருந்து, வருடத்துக்கு ரூ. 1750 வரை பல்வேறு கல்விக் கட்டங்களில் அதிக பட்ச கடன் வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாணவர் வீட்டில் தங்கி வருபவரா அல்லது ஹாஸ்டலில் தங்குபவரா, கல்வி ஸ்தாபனம் நகரப் பகுதியில் உள்ளதா, அல்லது கிராமப் பகுதியில் உள்ளதா, மாணவரின் உண்மையான தேவை ஆகியவற்றை ராஜ்ய சர்க்கார்கள் பரிசீலிக்கும். தகுதியை அனுசரித்தே மாணவர் பொறுக்கப்படுவர். ராஜ்ய சர்க்கார்கள்

மே மாதத்தில் மாணவர்களிட மிருந்து விண்ணப்பங்களைக் கோரும். ஆலோசனை போர்டு களுடன் கலந்தாலோசித்து உப காரச் சம்பளங்கள் ஒதுக்கப் பட்ட பின்னர் பொறுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்கள் அறிவிக்கப்படும். உபகாரச் சம்பள விதிகளுக்குக் கட்டுப் படுவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பத்திர மொன்றைச் சர்க்காருக்கு எழுதித் தர வேண் டும். உபகாரச் சம்பளம் பெற்ற வர், சம்பாதிக்க ஆரம்பித்து ஓராண்டுக்குப்பின், கடனைத் திருப்பிச்செலுத்துவது துவங் கும். மாதம் ரூ. 300—க்கு குறை வாகச் சம்பாதித்தால், 10-ல் ஒரு பங்கு செலுத்த வேண்டும். மாத வருமானம் ரூ. 300—க்கும் ரூ. 500—க்கு மிடையே இருந்தால் 8-ல் ஒரு பங்கும், ரூ. 500—க்கு மேல் மாத வருமானம் இருந்தால் 6—ல் ஒரு பங்கும் செலுத்த வேண்டும்.

(29—ம் பக்கத் தொடர்ச்சி)

"என்னுடன் வளர்ந்திங் கேறுக வயசில்
ஏற்றம் என்பது இனிவரும் ஒன்றே
வாழ்வின் இறுதி மாண்பார் பகுதி
முன்நிற் கின்ற பகுதியின் முதிர்வே
வாழ்நாள் இறைவன் வசத்தது காணீர்
இறைவன் உரைக்கும் இசை மொழி கேளீர்
'முழுமை முழுதும் முறை யில் நிற்பது
வாலிபக் காலம் வாழ்வின்முற் பாதி
தெய்வம் என்பதோர் சிந்தை ஊறி
அச்சம் அகற்றி அனைத்தையும் காண்க.' "

—"நல்வழி"

---

## அறிவுக் கதிர்

எந்த விதமான சடங்கு செய்தால் சூரியதோஷம் நீங்கும்?—இது நம்முடைய ஆராய்ச்சி. சூரியன் பூமியைவிட எத்தனை மடங்கு பெரியது? இது மேனாட்டானின் ஆராய்ச்சி. இந் நிலையில் அவன் வாழ்கிறான், நாம் வதைகிறோம் என்றால் இயற்கைதானே அது?

—அண்ணாதுரை

சந்தேகம், வருத்தம், மனச்சோர்வு, கோபம், ஏக்கம் முதலிய பிசாசுகள் யாவும் மனிதனை அடிக்கும் பொருட்டுப் பதுங்கிநிற் கின்றன, அவன் சோம்பலுக்கு இடம் கொடுக்கும்போது இவை யெல்லாம் அவனை வந்து தாக்குகின்றன.

—தாமஸ் கார்லைல்

# 10 வருட செகண்டரி கல்வி 11 வருடமாகும்

## மாநிலக் கல்விக் குழு சிபாரிசு சட்டசபையில் தாக்கல்

### எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு செலக்ஷன் இருக்காது

### சமூக பாடம் என்பது பூகோளம் சரித்திரம் எனப் பிரியும்

அடுத்த கல்வி ஆண்டான 1963-64-ம் ஆண்டு முதற் கொண்டு எஸ். எஸ். எல். ஸி. வரையிலுள்ள செகண்டரி கல்வி 11 ஆண்டுகள் நடக்கக் கூடியதாய் இருக்க வேண்டும் என்றும், அதன் பிறகு ஓராண்டு பிரியூனிவர்ஸிடியும், மூன்றாண்டுகள் பட்டப் படிப்பும் இருக்கவேண்டும்என்றும்மாநிலக் கல்வி ஆலோசனைக் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.

“சமூக அறிவு” என்ற பாடத் திட்டம் “சரித்திரம்” “பூகோளம்” என்ற தனித்தனிப் பாடங்களாக ஆக்கப்படுவதைத் தவிர வேறு மாற்றங்கள் இரா.

செகண்டரி வகுப்புகளான 9, 10, 11-ம் வகுப்புகளில் மொழிப் பாடங்களைத் தவிர இரு அடிப்படைப்பாடங்கள் கொண்டு வரப்படும். இவை தவிர இரண்டு தெரிவுப்பாடங்கள் இருக்கும். தெரிவுப் பாடங்கள் 9-ம் வகுப்பு முதற்கொண்டு இருக்கும். புதிய பாடத்திட்டம் 1964-65 கல்வி ஆண்டு முதல் செயல் படுத்தப் பட வேண்டும் என்று கமிட்டி தெரிவித்திருக்கிறது.

#### செலக்ஷன் தேவை இல்லை

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு செலக்ஷன் பரீட்சை தேவையில்லை என்ற கருத்தையும் கமிட்டி அங்கீகரித்திருக்கிறது.

கல்வி மந்திரி திரு. எம். பக்தவச்சலம் இந்தக் கல்வி அமைப்பு பற்றிய குறிப்பைச் சட்டசபையில் தாக்கல் செய்தார். திரு. கே. ஏ. மதியழகன் கேள்வி கேட்டிருந்தார். சர்க்காரின் முடிவுகள் அந்தக் குறிப்பில் அடங்கியுள்ளன என்று மந்திரி கூறினார்.

#### போதனா மொழி

செகண்டரி கல்வி வரை தமிழ் போதனா மொழியாக இருக்கும். ஆங்கிலம் வேண்டுமானால் அனுமதி தரப்படும். கல்லூரிப் படிப்புக்கு ஆங்கிலமே போதனா மொழியாக நீடிக்கும்.

அரசாங்கக் கல்லூரிகளில் விஸ்தரிப்பு இருந்தால் தமிழ் போதனா மொழிப் பிரிவுகள் ஏற்படுத்தப்படலாம். தனிப்பட்ட கல்லூரிகள் தமிழில் மாத்திரம்

போதிக்க முன் வந்தால் வரவேற்கப்படும்.

1963–64–ம் ஆண்டுக்குள்ளெல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் போதனு மொழி ஆக்கிவிட வேண்டும் என்ற முந்திய முடிவு தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

மும்மொழித் திட்டத்தின் கீழ் 2–வது பாகம் இந்தி அல்லது வேறு இந்திய மொழிகளில் வாங்கும் மார்க்குகள் கல்லூரிப் படிப்புக்குத் தகுதியாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. ஆனல் "மாடரேஷனுக்குக்" கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படும். 63-64 முதல் 3–ம் வகுப்பில் ஆங்கில மொழியை ஆரம்பித்து விட சர்க்கார் செய்த முடிவைக் கமிட்டி வரவேற்றிருக்கிறது.

## மாற்றங்கள் விவரம்

முதலில் 11 ஆண்டு செகண்டரி கல்வி; 2 ஆண்டு இன்டர்மீடியட், 2 ஆண்டு பட்டப் படிப்பு. ஆக மொத்தம் 15 ஆண்டுகள் இருந்தன. இதில் 11–வது ஆண்டில் பிரியூனிவர்சிடி கட்டத்தைப் புகுத்தி 3 ஆண்டு பட்டப் படிப்பாக ஆக்க அதாவது மொத்தம் 14 ஆண்டுகளாக ஆக்கத் திட்டமிடப்பட்டது.

இந்த மாற்றத்தால் பல சங்கடங்கள் தோன்ற ஆரம்பித்ததால் கல்வி அமைப்பை மறு பரிசீலனை செய்ய நேர்ந்தது. எப்படி மாற்றலாம் என்பதைப் பற்றி மாநிலக் கல்வி ஆலோசனைக் கமிட்டி ஆராய்ந்து இந்த முடிவுகளுக்கு வந்துள்ளது.

சென்ற பிப்ரவரியிலும் இந்த மாதம் 13, 14, 15–ம் தேதிகளிலும் கமிட்டி கூடிற்று.

கமிட்டி சிபாரிசு செய்துள்ள மாற்றங்களின் விவரங்களாவன:

செகண்டரி கல்வியின் காலம் குறைந்த பட்சம் 11 ஆண்டுகளாக இருக்க வேண்டும். இதில் 1–வது வகுப்பு முதல் 5–வது வகுப்புவரை ஆரம்ப (பிரைமரி) கல்வி என வழங்கப்படும். 6–வது வகுப்பு முதல் 8–வது வகுப்பு வரை உயர்தர ஆரம்ப (அப்பர் பிரைமரி) கல்வி என வழங்கப்படும். அடுத்து 9–வது வகுப்பு முதல் 11–வது வகுப்பு வரை செகண்டரி (உயர்நிலை) கல்வி என வழங்கப்படும். 11–வது வகுப்பு இறுதியில் எஸ்). எஸ். எல். சி. பரீட்சை.

எஸ். எஸ். எல். சி.க்குப் பிறகு உள்ள ஓராண்டு புகுமுக (பிரீ யூனிவர்ஸிடி) வகுப்பு கல்லூரிகளிலேயே இணைந்து இருக்கும். 3 ஆண்டு பட்டப் படிப்பில் மாற்றம் இல்லை.

## பாடத் திட்ட அமைப்பு

புதிய முறைக்கு மாற்றப்படும் போது பாடத் திட்டத்தில் கூடுமானவரை குறைந்த அளவில் தான் மாற்றங்கள் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் கமிட்டி ஆராய்ந்து பின்வரும் முடிவுக்கு வந்தது.

சமூகக் கல்வியை "சரித்திரம்", "பூகோளம்" என்று தனித்தனியாகப் பிரித்து விடுவதைத் தவிர மற்றபடி மாற்றங்கள் இருக்கா.

இப்போது 7-ம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் புதிதாகக் கொண்டு வரப்படும் 8-வது வகுப்புக்குச் செல்வார்கள். இப்போதுள்ள 8, 9, 10-ம் வகுப்புகள் இனிமேல் 9, 10, 11-ம் வகுப்புகள் என்று வழங்கப் படும்.

9, 10, 11-ம் வகுப்பில் மொழிகள் அன்றி "பொது விஞ்ஞானம்" "பொது கணிதம்" என்று இரு அடிப்படைப் பாடங்கள் இருக்கும். இவை போக பின்வரும் பாடங்களிலிருந்து இரு பாடங்களைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

தெரிவுப் பாடங்களாவன: கணிதம், பௌதீகம், ரசாயனம் சரித்திரம், பூகோளம், பொருளாதார அரிச்சுவடி, பையாலஜி (இயற்கை விஞ்ஞானம், பிராணி நூல்) வர்த்தகம், புராதன மொழிகள் (சமஸ்கிருதம், அரபி, பாரசீகம்), இந்திய மொழிகள், வீட்டு விஞ்ஞானம், இசை, ஓவியம், மற்றும் நுண்கலைகள்.

இந்தத் தெரிவுப் பாடங்கள் 10-வது வகுப்பு முதல் இருக்கும். ஆனால் மொழிப் பாடங்கள் 9-வது வகுப்பு முதல் ஆரம்பிக்கப்படும்.

சரித்திரமும், பூகோளமும் செகண்டரி கட்டத்தில் கற்றுத் தரப்படும். ஆனால் தெரிவுப் பாடங்களாகப் படிப்பவர்களுக்கு மாத்திரம் தான் அதில் அரசாங்க (பப்ளிக்) பரீட்சை இருக்கும். மற்றவர்களுக்கு இருக்காது. சிவிக்ஸ் செகண்டரி வகுப்புகளில் இருக்காது. உயர்தர ஆரம்ப வகுப்புகளாக 6 முதல் 8-ம் வகுப்புகளில் கற்றுத் தரப் படும்.

## பாடத் திட்டங்களின் அடிப்படை நோக்கம்

8-ம் வகுப்பு ஒரு இறுதிக் கட்டம். அதிலிருந்து மேல்படிப்புக்கோ அல்லது தொழில் படிப்புக்கோ போவார்கள் என்ற கருத்தில் பாடத்திட்டம் அமைக்கப்படும்.

11-வது வகுப்பு மற்றொரு இறுதிக் கட்டம். அதிலிருந்து கல்லூரிப் படிப்புக்கோ அல்லது உயர் தொழிற் கல்விக்கோ போவார்கள் என்ற நோக்கத்துடன் பாடத் திட்டம் வகுக்கப் படும். புதிய பாடத்திட்டம் 1964-65-ல் அமுலுக்கு வரும்.

ஆதாரக் கல்வியிலும் மாற்றம் செய்வது அவசியமெனக் கருதப்பட்டது. அது சம்பந்தமாகத் திரு. அரியநாயகம் கமிட்டி செய்த சிபாரிசுகள் பரிசீலனையில் இருந்து வருகின்றன. 6 முதல் 8-வது வகுப்பு வரை கட்டாயத் தொழிற்பயிற்சி இருக்க வேண்டும் என்று கமிட்டி கருதுகிறது.

# தமிழகத்தில் தரப்படும் கல்வி

## அறிஞர் அண்ணாத்துரையின் கருத்துரை

[சென்னை தியாகராயர் கல்லூரியில் அறிஞர் அண்ணாதுரை ஸ்ரீ அவர்கள் 3—4—63 அன்று ஆற்றிய சொற்பொழிவின் சில பகுதிகள் இவை.]

அரசாங்கம் கல்விக்குச் செலவிடும் பணம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது; இதை மறுப்பதற்கில்லை. அப்படியிருந்தும், கல்வியின் தரம் உயரவில்லை. செய்கின்ற செலவுக்கு ஏற்பக்கல்வியின் தரம் கூடவில்லை—மாறாகக் குறைந்து கொண்டே வருகிறது. இதையும் யாரும் மறுக்க முடியாது. இதற்குக் காரணம் என்ன?

ஏரி நிறையத் தண்ணீர் நிரம்பியுள்ளது; ஆனால் வயலுக்குப் போதிய தண்ணீர் வரவில்லை என்றால் என்ன பொருள்? 'வாய்க்கால் சரியில்லை' என்பது தான்!

எனவே, கல்விக்கெனச் செலவாகும் பணத்தை உரிய காலத்தில் — தகுந்த வகையில்—நல்ல பலனைத் தரத்தக்க அளவில் செலவிடவேண்டும்.

அடிக்கடி அமைச்சர் மாறும் போதெல்லாம் கல்வித் திட்டத்தையும் மாற்றிக் கொண்டிருப்பதே கல்வியின் தரம் குறைவு படுவதற்கு முக்கிய காரணமாகவுள்ளது.

அரசினர், கல்விக்காக ஏராளமாகச் செலவிடுகிறார்கள் என்றாலும், அரசினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்வி நிலையங்களைவிட, தனியார் துறையில் நிறுவப்பட்டுள்ள கல்வி நிலையங்களே அதிகமாக உள்ளன. சென்னையில் உள்ள பச்சையப்பன், தியாகராயர் கல்லூரிகளும், காஞ்சியில் திரு. கந்தசாமியார் அவர்களின் முழுப் பொருளுதவியுடன் துவக்கப்பட்ட பச்சையப்பன் கல்லூரியும், சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், காரைக்குடியில் உள்ள அழகப்பா கல்லூரியும், மதுரையில் உள்ள கருமுத்து தியாகராசனார் கல்லூரியும் தனியார் துறைக் கல்வி நிறுவனங்களேயாகும்.

இவை தனியார் கல்லூரிகள் என்றாலும், அவற்றிற்கும் அரசினர் உதவிபுரிகிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. இப்படி, ஏராளமாகச் செலவு செய்தும் ஏன் கல்வியின் தரம் உயரவில்லை?

இன்று, கல்வித் துறையில் உள்ள ஆசிரியர்களுக்கே தெரியாது—'அடுத்த ஆண்டு மாணவர்கட்கு எதை எப்படிச் சொல்லிக் கொடுக்கப் போகிறோம்' என்று, மாணவர்களுக்கும் தெரியாது—'எதைப் படிக்கப் போகிறோம்' என்று!

எனது மகன் இடையொன்று ஒரு

னான், ஏழாவது படித்துத்தேறும லே எட்டாம் வகுப்புக்குப்போய் விட்டதாகச் சொன்னான்; இந்தப் புதுமை நாங்கள் படித்த காலத்தி லெல்லாம் கேள்விப்பட்டதில்லை. காரணம் என்ன என்று கேட்ட தற்கு, கல்வி முறை மாற்றி யமைக்கப்பட்டதால், புதிய எட் டாம் வகுப்பில் தான் சேர்க்கப் பட்டதாக அவன் கூறினான்.

அடிக்கடி, அமைச்சர் மாறும் போதெல்லாம் கல்வித் திட்டமும் மாற்றியமைக்கப்படுகிறது.

ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ளும் மாணவனை நேரே ஓடச் செய்வதுதான் முறை. ஆசிரியர் 'விசில்' அடித்து முத லில் மேற்கு நோக்கி ஓடச் சொல்லி, பிறகு கிழக்கே திரும் பச் சொல்லி, அடுத்து வடக்கே நோக்கி ஓடச் சொன்னால் என்ன ஆகும்? திசை மாற்றத்தால் மாணவன் திக்குமுக்கலாடு வான்; அவனுடைய உணர்ச்சி குன்றிப்போகும்.

அதைப்போலத்தான், கல்வி முறையிலும் அடிக்கடி திசை மாறுவது, படிக்கும் உணர்ச் சியையே குன்றச் செய்யும்; தரத் தையும் குறைக்கும்.

என் மகன் படிக்கும் படிப்பின் தரம், நான் படித்த காலத்தில் இருந்ததைவிட மட்டமாக உள் ளது. கல்வியின் தரம்தான் குறைந்திருக்கிறது என்கிறேனே தவிர, 'அறிவு மட்டம்' என்று சொல்லவில்லை; காரணம் நான் படித்த காலத்தில் இருந்ததை விட இப்போது, பொது அறிவு வளர்வதற்கான சாதனங்கள் நிரம்ப இருக்கின்றன.

நாங்கள் படித்த காலத்தில் வானொலியைப் பார்த்ததே இல்லை. இப்போதுள்ள மாணவர் கள் வானொலியைப் பார்ப்பது— கேட்பது மட்டுமல்ல; அதை எப்படி இயக்குவது என்றும் தெரிந்து கொள்ள வாய்ப்பிருக் கிறது. அந்தக் காலத்தில் தமிழ் கற்க, தமிழுக்கு இந்த அளவு ஆக்கமும் ஊக்கமும் இருந்த தில்லை.

எங்களூர் பச்சையப்பன் கல் லூரிக்குப் புதிதாகவரும் ஆசிரிய ரைக் கேட்டால், 'நான் அக்க வுண்டெண்ட் ஜெனரல் ஆபீ சுக்கு விண்ணப்பித்தேன்; இன் னும் எத்தனையோ துறைகளுக்கு மனுப் போட்டேன்; எங்கும் வேலை கிடைக்கவில்லை; கடைசி யாக இங்கு வந்தேன்' என்பார்.

இப்படி, தங்கள் கடைசி முயற்சியாகத்தான் ஆசிரியர் வேலையை ஏற்கிறார்கள்! அதனால் தான் தரமும் கடைசித் தரமாக இருக்கிறது!

ஆசிரியர்கட்குப் போதிய வள மும் வசதியும், ஊதியமும் மதிப் பும் அளிக்கப்படவேண்டும்.

அரசியலில் ஆதிக்கம் கொண் டுள்ளவர்கள் —ஆளுங்கட்சியாக உள்ளவர்கள், தங்கள் இஷ்டப் படி கல்வித்துறையில் உள்ளவர் களை ஆட்டிப்படைப்பது என்பது கூடாது.

இதே கல்லூரியில் முன்பு முதல்வராக இருந்து காலஞ் சென்ற ஒருவர்—அவர் எங்கள் கழகத்தின் பொதுக் குழுக் கூட்டத்துக்கு இக்கல்லூரியில் இடம் கொடுத்துவிட்டார் என்பதற்காக—ஒரு பெரிய அதிகாரியைப் பார்க்கச் சென்றபோது, அந்தப் பெரிய அதிகாரி அவரை உட்காரக்கூட வைக்காமல் பேசி அனுப்பிவிட்டாராம். இச்செய்தியை அவரே (கல்லூரி முதல்வரே) என்னிடம் கலங்கிய கண்களுடன் சொன்னார்; நானும் கண்கலங்கிவிட்டேன். இத்தகைய கொடுங்கோன்மை நடைபெறுகிறது!

ஒரு கல்லூரி முதல்வருக்கே இந்தக் கதி என்றால், ஆரம்ப ஆசிரியர்கள் நிலை என்ன? ஓர் ஆரம்ப ஆசிரியர் வேறு ஒன்றும் செய்யவேண்டிய தில்லை. அந்த ஊரிலுள்ள ஆளுங் கட்சியைச் சேர்ந்த ஒருவர் அவரைப் பார்க்கும் போது சிரிக்காவிட்டால் கூடப்போதும் வந்தது ஆபத்து! —"இந்த ஆசிரியர் என்னைப் பார்த்ததும் முகத்தைச் சுளித்து ஒருமாதிரியாக வைத்துக்கொண்டார்; ஒருவேளை அவர் அந்தக் கழகத்தைச் சேர்ந்தவராக இருப்பாரோ எனச் சந்தேகப்படுகிறேன்" என்று எழுதி மனுப் பறக்கும் மேலிடத்துக்கு. உடனே மாற்றல் உத்தரவு பிறக்கும். ஒரு நல்ல, அறிவு பெற்ற அரைத்தனம் இப்படிச் செய்யுமா என்றால், நடக்கிறது இப்படி!

நான்கு நாட்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சியொன்றை இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒருவர், தாம் இருந்த ஊரிலிருந்து மாற்றலாகி மற்றொரு ஊருக்குச் சென்றார்; அவரிடம் பொறுப்பை ஒப்புவித்து வேறொரு ஊருக்குச் செல்ல வேண்டியவர், அன்றையத் தினம் பொறுப்பை ஒப்புவிக்கவில்லை, இன்னும் சில வேலைகளை முடிக்கவேண்டியுள்ளன; அவைகளையெல்லாம் முடித்து விட்டு இரண்டொரு நாட்களில் பொறுப்பை ஒப்படைக்கிறேன். அதுவரை பொறுத்திருங்கள்' என்று அவர் சொன்னார்.

அப்படிச் சொல்லிவிட்டு, நேரே சென்னைவந்து பார்க்க வேண்டியவர்களைப் பார்த்துவிட்டு ஊர் திரும்பினார். ஊர் திரும்பியதும், அவ்வூருக்கு மாற்றலாகி வந்திருந்தவரிடம் 'நீங்கள் பழைய ஊருக்கே திரும்பிப் போகலாம்; மாற்றல் ரத்து செய்யப்பட்டுவிட்டது; போங்கள்' என்று கூறிவிட்டார்.

மாற்றலாகிப் பொறுப்பேற்பதற்கு முன்பே அது ரத்து செய்யப்படுகிறது என்றால், இது எங்கே நடக்கும்? ஆனால், நடந்தது உண்மை. எனக்கு நன்றாகத் தெரியும்-ஊரையும் பேரையும் சொல்ல நான் விரும்பவில்லை!

இப்படி ஆசிரியர்கள் ஊருக்கு, ஊர் மாற்றப்படுவதற்கும், கிரா

மத்திற்குக் கிராமம் வேட்டை யாடப்படுவதற்கும், அரசியல் ஆதிக்கக்காரர்கள் தலையிடக் கூடாது.

'அரசியல்வாதிகள் தலையிடக் கூடாது' என்று நான் கூறுவதால், 'பள்ளிக்கூடத்தின் கட்டிடம் இருந்தால் என்ன—இடிந்து விழுந்தால் என்ன?' என்று தலையிடாமல் இருந்துவிடக்கூடாது.

இப்போது மாற்றப்பட்டுள்ள புதிய பாடத் திட்டத்தில் ஒரு நல்ல காரியத்தைச் செய்ததற்காக அமைச்சர் பக்தவச்சலம் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதாவது, சரித்திரம், பூகோளம் ஆகிய பாடங்களை அவர் மீண்டும் புகுத்தியிருப்பது பாராட்டத்தக்கது. பல விஷயங்களில் எனக்கும் அவருக்கும் கருத்து வேற்றுமையுண்டு; என்றாலும், இந்த ஒரு காரியத்தைச் செய்ததற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்.

நான் அவரைப் பாராட்டுவதைப் பார்த்து நமது பத்திரிகைக் காரர்கள், 'பக்தவத்சலத்துக்கு அண்ணாதுரை பாராட்டு' என்று பொதுப்படையாகப் போட்டு விடுவார்கள் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். 'இந்த ஒரு காரியத்துக்காக மட்டுமே அவரைப் பாராட்டுகிறேன்' என்று!

சில ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய மூன்றாவது மகன், ஒரு பாடப் புத்தகத்தைக் காண்பித்தான். 'சமூகப் பாடம்' என்று அதற்குப் பெயர் இருந்தது. அதில் ஆறாவது பக்கத்தைப் புரட்டினேன் 'அலெக்சாண்டர்' என்றிருந்தது. 9—வது பக்கத்தில், 'பாபரே' என்றிருந்தது; 11—ம் பக்கத்தில் 'தைமூர்'—17-ம் பக்கத்தில் 'நெப்போலியன்'—என்றெல்லாம் இருந்தன; 28—ம் பக்கத்தில் காண்டா மிருகத்தைப் பற்றி இருந்தது!

இப்படி, ஒன்றுக்கொன்று இணைப்பான அறிவுபெற முடியாத அளவுக்கு அந்தப் பாட அமைப்பு இருந்தது. அதைச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியருக்கும் சரி—படிக்கும் மாணவர்கட்கும் சரி-குழப்பமாகவே இருக்கும். நல்ல வேளையாக அதை நீக்கிவிட்டு, மீண்டும் பூகோள—சரித்திரப் பாடங்களைப் புகுத்தியது வரவேற்கத்தக்கதாகும்.

துணைப் பாடங்கள் என்பவை, பழைய காலத்தில் இருந்த அளவுக்கு இன்று இல்லை; பழைய முறை மாணவர்கட்கு, நல்ல அடிப்படை அறிவு பெறத்தக்க வகையிலும் ஆழ்ந்து படிக்கத் தக்க அளவிலும் இருந்தன.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களை அமைச்சரோ, அதிகாரிகளோ அழைத்துக் கேட்டால் தைரியமாகத் தங்கள் கருத்தைச் சொல்ல வேண்டும்.

கல்வியமைச்சராகத் திரு. சுப்பிரமணியம் இருந்த காலத்தில்,

அவர் 'தமிழைக் கல்லூரியில் பயிற்சி மொழியாக வைக்க முடியுமா?' என்று கேட்டபோது, ஆசிரியர்கள், 'முடியும்' என்றார்கள். இன்றைய கல்வியமைச்சர் திரு. பக்தவத்சலம், அதே ஆசிரியர்களைக் கூப்பிட்டு, 'தமிழில் பாடம் நடத்துவது கஷ்டமாக இருக்கிறது அல்லவா?' என்று கேட்டால், 'ஆமாம்; கொஞ்சம் கஷ்டம்தான்' என்கிறார்கள். அதைத்தான் சட்டமன்றத்திலும் அமைச்சர் சொல்லுகிறார்.

முன்காலத்தில், பாடப்புத்தகத்தைத் திறந்தால் முதல் பக்கம் மன்னரின் படம் இருக்கும்; அதில், 'இதோ நமது ராஜா; இவர் மிக நல்லவர்' என்று இருக்கும். அந்த மன்னர் இறந்த பின்னர், அடுத்துவரும் மன்னரின் படம் இருக்கும்; அதிலும், 'இதோ நமது ராஜா; இவர் மிக நல்லவர்' என்றுதான் இருக்கும். படம் மாறுமே தவிர, பாடம் மாறாது!

அதேபோல், இப்போது, 'இதோ நமது மந்திரி; இவர் மிகவும் நல்லவர்' என்றுதான் இருக்க வேண்டுமே தவிர— மந்திரிகளின் படம் மாறினாலும், பாடம் மாறக்கூடாது.

கோவை அரசினர் கலைக் கல்லூரியில் தமிழைப்பயிற்சிமொழியாக வைத்து, 'தமிழால் முடியுமா?' என்று பார்த்து, 'தமிழால் முடியும்' என்றார் சி. சுப்பிரமணியம்.

'தமிழாலே முடியுமா?' என்று கேள்விக் குறியைப் போடுகிறார் பக்தவத்சலம்.

இன்னும் கொஞ்ச நாள் போனால், 'தமிழாலா முடியும்!' என்று, கேள்விக் குறியை நீக்கிவிட்டு ஆச்சரியக் குறியைப் போட்டுவிடுவார்!

ஆசிரியருக்குக் கருத்துச் சுதந்தரம் இருக்கவேண்டும். கருத்துக்குத் தடைபோடாத நல்லெண்ணம் அரசினருக்கு இருக்க வேண்டும்.

கருத்துக்கு அரசினர் தடை போடுவது ஆசிரியர்களுக்கு மட்டும் அல்ல—எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கும் அந்த நிலைமை இருக்கிறது.

உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் சொல்லிக்கொடுத்து மாணவர்கள் படிக்கவேண்டும்; கல்லூரியில் அந்த நிலை இல்லை.

கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதற்கு முன்பே படித்துப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தக் கல்லூரியின் ஆண்டறிக்கையில்கூட, 9,000 நூல்கள் இக் கல்லூரி நூல் நிலையத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது; அவற்றையெல்லாம் மாணவர்கள் படிக்கவேண்டும்.

நான் சில மாதங்களுக்குமுன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருந்தபோது, துணைவேந்தராக உள்ள சர். சி.

பி. இராமசாமி ஐயர் அவர்களைக்கூட இதுபற்றிக் கேட்டேன்; அவர், 'நான்கு சுவருக்குள் கருத்துச் சுதந்தரம் நிச்சயம் உண்டு' என்றார்.

அதாவது, அந்தப் பல்கலைக் கழகக் கட்டிடத்திற்குள் சுதந்தரம் உண்டு; வெளியே யாருடைய அதிகாரமோ இருக்கிறது என்பதுதான் அதற்குப் பொருள்!

மாணவர்கள்மீது அரசாங்கத்துக்குச் சந்தேகம் இருக்கக் கூடாது. மாணவரைக் கூப்பிட்டால், 'உள்ளேன் ஐயா', அல்லது 'இருக்கிறேன் ஐயா' என்று மாணவன் சொன்னால், ஆசிரியர் சந்தேகப்படுகிறார்!

அப்படிச் சொல்ல அனுமதிக்கும் ஆசிரியரைப்பற்றிப் பள்ளி நிர்வாகியோ, அரசினரோ சந்தேகப்படுகிறார்கள்!

நல்ல தமிழில் இருவர் பேசிக் கொண்டாலே சந்தேகப்படும் ஆசிரியரும், அருவருப்படையும் நிர்வாகியும் இருப்பதை நான் அறிவேன்.

இப்படிப்பட்டவர்களால் மாணவர்களும், ஆசிரியர்களும் கருத்துச் சுதந்தரத்தை இழந்து வருகிறார்கள்.

'புரோகிதப் புரட்டு வேண்டாம்; இதில் ஏன் இவர்கள் ஆதிக்கம்?' என்றெல்லாம் கேட்டு ஆராய்ந்து, முதன் முதல் கருத்துச் சுதந்தரத்தை இந்த நாட்டில் நிலைநாட்டிய சர். தியாகராயர் பெயரால் உள்ள இந்தக் கல்லூரியில், அத்தகைய கருத்துச் சுதந்தரம் நல்ல முறையில் உருவாகப் பாடுபட வேண்டும்.

இதை நான் இங்குச் சொல்கிற காரணத்தால், சிலர் அருவருப்படையக்கூடும்.

கருத்து என்பது எது? — அதை எப்படி எடுத்துச் சொல்வது என்பதையெல்லாம் மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

கருத்துரிமை உண்டு என்பதால் மாணவர்கள், வகுப்பறைக்குள் நுழைந்ததும் ஆசிரியரைப் பார்த்து 'உங்கள் தலை ஏன் இப்படி இருக்கிறது?' என்று கேட்கக்கூடாது.

— "நம் நாடு"

---

(58-ம் பக்கத் தொடர்ச்சி)

பிணிகளுக்கு நாள் ஒன்றுக்கு 3(அ) 4முறை ஒரு தேக்கரண்டி ஜலத்தில் கலக்கிக் கொடுக்கவும்.

வாந்தியினால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டி கொடுக்க வாந்தி நிற்கும். இந்த சர்பத் 3 மாதங்கள் வரை கெடாமலிருக்கும்.

— "ஞானசம்பந்தம்"

# கல்வித்துறைச் செய்திகள்

## மீண்டும் எட்டாம் வகுப்பு

—

### கைத்தொழில் ஆசிரியர்கள் முழு நேர வேலையும் நீக்கும்

—

### மந்திரி பக்தவத்சலம் தகவல்

சென்னை, மார்ச் 13–தற்போது எடுபட்டுள்ள எட்டாம் வகுப்பை மீண்டும் வைக்கலாமென்ற யோசனை இருக்கின்றது என்று கல்வி மந்திரி திரு. எம். பக்தவச்சலம் இன்று சட்டசபையில் தெரிவித்தார்.

1963–64-ம் கல்வி ஆண்டிலிருந்து உயர் துவக்கப் பள்ளிகளில் தொழிற் கல்வி போதிக்கப் பகுதி நேர ஆசிரியர்கள் இருந்தால் போதுமென அரசாங்கம் கருதுகிறதா என்று திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (தி. மு. க.) கேட்டபோது இவ்விஷயம் பரிசீலிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் பதிலளித்தார்.

இவ்வாண்டு ஏப்ரல் வரை இந்தக் கைத் தொழில் ஆசிரியர்கள் முழுநேர ஊழியர்களாகவே கருதப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாகவும், தற்போது எடுக்கப்பட்டுள்ள எட்டாம் வகுப்பை மீண்டும் அடுத்த கல்வி ஆண்டு முதல் வைப்பதால் இந்தக் கைத் தொழில் ஆசிரியர்கள் தொடர்ந்து முழு நேர ஆசிரியர்களாக இருக்க முடியும். இது குறித்து விரைவில் முடிவு செய்வோம் என்று கல்வி மந்திரி பதிலளித்தார்.

திருமதி குழந்தையம்மாள்:— இவர்கள் முழுநேர ஊழியர்களாகக் கருதப் பட வேண்டுமென்று மட்டுமே கூறப்பட்டுள்ளதால் பல பள்ளி நிர்வாகிகள் இந்த ஆசிரியர்களுக்குப் பகுதி நேரசம்பளமே கொடுக்கிறார்கள். இது குறித்து நடவடிக்கை எடுப்பீர்களா?

கல்வி மந்திரி: இவர்களுக்கு முழு நேர சம்பளம் கொடுக்கப் பட வேண்டும். அப்படி எங்கேனும் கொடுக்கப்படவில்லை என்றால் சர்க்கார் கவனத்துக்குக் கொண்டு வரலாம்.

## ஹையர் கிரேடு ஆசிரியர் பயிற்சி ரத்தாகுமா ?

திரு. ஆர். எஸ். வீரப்ப செட்டியாரின் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அடுத்த ஆண்டு முதல் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது படிப்படியாகக் குறைக்கப்படும் என்று கல்வி மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினார்.

## ஆங்கில பாட போதனை எந்த வகுப்பிலிருந்து ?

அடுத்த ஆண்டிலிருந்து 3–

ஆவது வகுப்பிலிருந்து ஆங்கிலம், போதிப்பது ஆலோசனையில் இருந்து வருகின்றது. செகண்டரி ஆசிரியர்களே இந்த வகுப்புகளை நடத்துவார்கள்.

ஆங்கில மொழி கற்பிக்கும் திட்டத்தின் கீழ் பயிற்சிப்பள்ளி ஆசிரியர்கள் பலர் ஏற்கனவே பயிற்சி பெற்றனர். மீதியுள்ள பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு நவீன முறைகளில் ஆங்கிலம் கற்பிக்கப் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளது.

## மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கில போதனை

மந்திரி பக்தவத்சலம் அறிவிப்பு

சென்னை, பிப். 4— அடுத்த கல்வி ஆண்டிலிருந்து 3-வது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் போதிக்கப்படும். தமிழ்நாட்டில் கல்வி முறையில் சில மாறுதல்கள் செய்வது குறித்து அரசாங்கம் கொண்டுள்ள கருத்துக்கள் மார்ச் மாதத்தில் சட்டசபை முன்வைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும். இது முடிவானதாக இருக்கும். அடிக்கடி மாறுதல் இராது என்று மாநில நிதி, கல்வி மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று சட்டசபையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்தார்.

கல்லூரிப் படிப்பில் தமிழைப் போதனை மொழியாக அமுல்படுத்தியதன் விளைவாகக் கல்வியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைத் திட்ட மதிப்பீட்டுக் குழுவினர் கண்காணித்தனர். இக்குழுவினர் செய்த சிபாரிசுகள் அரசாங்கத்தால் கவனிக்கப்பட்டு வருகின்றன என்று திரு. எம். கல்யாணசுந்தரம் பெயரில் இருந்த கேள்விக்குப் பதில் அளிக்கையில் நிதி, கல்வி மந்திரி தெரிவித்தார்.

திரு. க. ர. நல்லசிவம்: 1962ல் ஆங்கிலம்மூலம் பாடம் போதிக்க எத்தனைப் பள்ளிகளிலிருந்து அனுமதி கோரப்பட்டது?

மந்திரி பதில்: 145 பள்ளிகள் அனுமதி கோரின. 98 பள்ளிகளுக்கு அனுமதி வழங்கினோம்.

திரு. நெடுஞ்செழியன்: ஆங்கிலத்தைப் போதனைமொழியாகக் கொண்ட பள்ளிகளில் தமிழும் கற்றுத்தர வகை செய்யப்படுமா?

மந்திரி: அத்தகைய தனிப் பள்ளிகளிலும் தற்போது தமிழ், தெலுங்கு ஆகியவை போதிக்கப்படுகின்றன.

கரிச்சகவுடர்: ஒவ்வொரு பள்ளியிலும் ஆங்கிலத்தில் கல்வி கற்பிக்க ஒரு பிரிவு கட்டாயமாக நடத்த வேண்டுமென்று உத்தரவிடுவீர்களா?

மந்திரி: அத்தகைய உத்தேசமில்லை. அதற்கு அவசியமும் இல்லை.

கேள்வி: எந்தெந்த இடத்தில் ஆங்கிலப் போதனை மொழிப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப் படும்?

மந்திரி: மாவட்டத் தலைநகர் ஒவ்வொன்றிலும் இப்படி ஒரு பள்ளி இருக்க வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகின்றது. பல்வேறு மொழிகள் பேசக் கூடிய அரசாங்க அதிகாரிகளின் குழந்தைகளது படிப்புக்கு இது துணை புரியும்.

திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர்: கல்வி விஷயத்தில் மந்திரி திரு. பக்தவத்சலம் கொண்டுள்ள சிறப்பான கருத்துகள் எப்போது அமுலுக்கு வரும்?

மந்திரி: கல்விச் சீரமைப்பில் அரசாங்கம் கொண்டுள்ள கருத்துக்கள் அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் அங்கத்தினர்கள் முன்வைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும். அடுத்த கல்வி ஆண்டுமுதல் இந்த முடிவுகள் அமுலாகும். முடிவுகள் இறுதி யாக இருக்கும். அடிக்கடி மாற்றப்படமாட்டாது.

## ஆரம்ப ஆசிரியர்களுக்கு மேல்சபையில் இடம்

சட்டசபையில் கேள்வி

சென்னை, மார்ச் 18— தற்போது உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குத் தமிழ்நாடு மேல் சபையில் பிரதிநிதித்வம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தனிப் பிரதிநிதித்வம் கொடுக்கும் உத்தேசமில்லையென்றும் நிதிமந்திரி திரு. பக்தவத்சலம் இன்று சட்டசபையில் திரு. ம. கமலநாதன் (தி. மு. க.) கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

திரு. கரிச்ச கவுடரின் கேள்வி ஒன்றுக்குப்பதிலளிக்கையில் இம்மாதிரி தனி பிரதிநிதித்வம் ஆசிரியர்களுக்கு மட்டும் இருப்பதை அகற்றி விட வேண்டுமென்ற ஒரு கருத்தும் வெளியில் உலவுவதாக நிதி மந்திரி தெரிவித்தார்.

திரு. பி. முருகையன்: பஞ்சாயத்துக் கூட்டு மன்றக் கல்விக் குழுக்களில் ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்வம் அளிக்கப்படுமா?

நிதி மந்திரி: அத்தகைய உத்தேசமில்லை.

திரு. மதியழகன்: சர்க்கார் பள்ளி ஆசிரியர்கள் சர்க்கார் ஊழியர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்களும் தேர்தலில் நிற்க வசதி செய்யப்படுமா?

நிதிமந்திரி: அம்மாதிரி உத்தேசமில்லை.

## ஆசிரியத்தம்பதிகள் பிரிவாற்றுமை!

சென்னை, மார்ச் 16— ஆசிரியத் தம்பதிகள் பற்றி சட்டசபையில் இன்று கேள்வி நேரத்தின்போது சுவையான கேள்விகள் எழுந்தன.

திரு. எஸ். மாதவன் கேள்விக்குப் பதிலளிக்கையில் கணவனும் — மனைவியும் பொதுவாக ஒரே இடத்தில் வேலைக்கமர்த்தப்பட வேண்டும். ஆனால், நிர்வாகக் காரணங்களுக்காக, அவர்களில் ஒருவரை இன்னொரு இடத்துக்கு மாற்றலாம் என்று நிதிமந்திரி பதிலளித்தார்.

திரு. சுசிவர்ணம்: குடும்பக் கட்டுப்பாட்டை அமுல் நடத்த இம்மாதிரி தம்பதிகள் பிரித்து வைக்கப்படுகின்றனரா? (சிரிப்பு)

நிதி மந்திரி: குடும்பக்கட்டுப்பாடு விஷயம் வேறு. அதற்காக அம்மாதிரி தம்பதிகளைப் பிரித்து வைப்பது பெரும்பாவம் (மேலும் சிரிப்பு)

திரு. ரெங்கசாமி ரெட்டியார்: ஆசிரியர்களாகவுள்ள கணவன் — மனைவி வீட்டில் தகராறு செய்து கொள்வதால், அதைப் பார்த்து மற்றவர்கள் பழகாமல் இருக்க அவர்களைப் பிரித்து வைக்கலாமல்லவா? (சிரிப்பு)

நிதி மந்திரி: ஆம். அப்படியும் புகார் வந்துள்ளது. ஆசிரியத் தம்பதிகளுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு, பள்ளிக்கூடத்தில் வந்தும் பாடம் சொல்லித்தராமல் இந்தச் சண்டையைத் தொடர்ந்ததாகவும் புகார் வந்துள்ளது. (சபையில் பலத்த சிரிப்பு.)

திரு. ராகவரெட்டியார்: (சுதந்) அரசியல் காரணங்களுக்காக ஆசிரியர்களை இடம் விட்டு இடம் மாற்றுவது தடுக்கப்பட வேண்டும்.

நிதி மந்திரி: பஞ்சாயத்து ஆலோசனைக் குழுவில் இது பற்றிக் குறிப்பிட்டால், பஞ்சாயத்து யூனியன்களைக் கலந்தாலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

## 4-வது வகுப்பை உயர்ந்த வகுப்பாக உள்ள பள்ளிகள்

### ஆங்கிலம் கற்றுத் தர செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்

சென்னை, மார்ச் 19—நான்காவது வகுப்பை உயர்ந்த வகுப்பாகக் கொண்டிருக்கும் ஆரம்பப் பள்ளிகள் 1963-64-ம் கல்வி ஆண்டு முதல் ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுக்க ஒரு செகண்டரிகிரேடு ஆசிரியரை நியமித்துக் கொள்ளலாம். சர்க்கார் இதற்கு அனுமதி வழங்க முடிவு செய்திருக்கிறார்கள்.

ஹையர் கிரேடு ஆசிரியர்க்குப் பதிலாகவோ அல்லது ஆசிரியர்—மாணவர் விகிதத்திற்கு ஏற்ப மேற்கொண்டோ அந்த ஆசிரியரை நியமித்துக் கொள்ளலாம்.

கல்வித் துறை நெறியாளர் சிபாரிசுப்படி இந்த அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

4-ம் வகுப்பு முதல் ஆங்கிலம் கற்றுத்தர சென்ற ஆண்டு உத்தரவிடப்பட்டது நினைவிருக்கலாம். அப்போது 5-ம் வகுப்பில் ஆங்கிலம் கற்றுக் கொடுக்கும் ஆசிரி

யமே 4-ம் வகுப்பையும் சேர்த்துப் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால் சில ஆரம்பப் பள்ளிகளில் 4—ம் வகுப்புதான் உயர்ந்த வகுப்பாக இருக்கிறது. அதற்காகவே இந்தப் புது முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

## ஆதாரக் கல்வித் திட்டத்தைத் திருத்தி அமைக்க யோசனை

— —

### அமைச்சர் பக்தவத்சலம் தகவல்

— —

சென்னை, மார்ச் 8 — ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேருவதற்குத் தற்போதுள்ள கல்வி யோக்யதாம்சங்களை மாற்றுவதாக இப்போது உத்தேசமில்லை என்று மாநிலக் கல்வி மந்திரி திரு. எம். பக்தவத்சலம் இன்று சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

ஆதாரக்கல்வி முறையைக் கைவிடுவதாக இல்லை. ஆனால் இத் திட்டத்தை மாற்றியமைப்பது பற்றி யோசித்து வருகிறோம் என்றும் நிதிமந்திரி தெரிவித்தார்.

திரு. கே. ஏ. மதியழகன் கேள்விக்குப் பதிலளிக்கையில் தமிழ் நாட்டில் ஆதாரக் கல்வி முறை அமுலாகி வரும் விதம் பற்றி ஆராய்ந்த கல்வி நிபுணர் திரு அரியநாயகத்தின் அறிக்கை அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளது. இதன் மீதான பரிசீலனை முடிந்ததும் இந்த அறிக்கை சட்டசபை முன் வைக்கப்படும் என்று மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினார்.

திரு. மதியழகன்: ஆதாரக் கல்விமுறை நிபுணரான இந்திய யூனியன் உபராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் உசேன் இந்தக் கல்வி முறை தோல்வி கண்டுவிட்டதாகக் கூறியுள்ளாரே ?

நிதி மந்திரி: ஏதோ சில விடங்களில் நடைபெறுவதைப் பார்த்து அவர் அப்படிக் கூறியிருக்கலாம்.

சீராக நடக்க வேண்டுமென்பதற்காக அவர் அப்படிச் சொல்லியிருப்பார். அதற்குப் பின் நான் அவருடன் பேசினேன். அவரும் நானும் ஒரு மாநாட்டிலும் கலந்துகொண்டோம்.

திரு. நஞ்சுண்டராவ்: நூல் நூற்பும், நெசவும் மட்டுமல்லாமல் விவசாயம், மண்பாண்ட உற்பத்தி, தச்சுத் தொழில் ஆகியவையும் ஆதாரக்கல்வி முறையில் போதிக்கப்பட்டால் இத் திட்டம் வெற்றி பெறுமென்று அரசாங்கம் கருதுகின்றதா ?

மந்திரி: நிபுணர்கள் அப்படியும் கருதுகிறார்கள்.

## பஞ்சாயத்துப் பள்ளிகள் பாடப் புத்தகங்கள்

— —

### யூனியன் கல்விக் குழுக்கள் நிர்ணயிக்கும்

— —

சென்னை, மார்ச் 15 — பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்குப்

பாடப் புத்தகங்களை நிர்ணயிப்பது அந்தந்த யூனியனின் கல்விக் குழுக்களிடம் விடப்பட்டுள்ளது. மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலின் கல்விக் குழுவினிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைப்பது பற்றி சர்க்கார் பரிசீலித்து வருகிறார்கள் என்று மந்திரி திரு. எம். பக்தவத்சலம் இன்று சட்டசபையில் திரு. எம். கல்யாணசுந்தரம் பெயரில் எழுந்த கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

மதுரை மாவட்டத்தில் யூனியனுக்கு யூனியன் பாடப் புத்தகங்கள் வேறுபட்டிருக்கின்றனவே என்று திரு. வி. எஸ். எஸ். மணி கேட்டபோது இம்மாதிரி எல்லாமிருப்பதனால்தான் மாவட்ட முழுவதற்குமாக ஒரு குழுவினிடம் பாடப் புத்தகம் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை ஒப்படைப்பது பற்றி அரசாங்கம் யோசித்து வருகின்றது என்று நிதி மந்திரி கூறினார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் மாநில முழுதும் ஒரு வகுப்புக்கு ஒரே புத்தகம் என்று வைக்கத் தேவையில்லை, ஒரே தரமுள்ள பல புத்தகங்கள் இருக்கலாம் என்று நிதி மந்திரி குறிப்பிட்டார்.

திரு. எஸ். ஜே. ராமசாமி (தி. மு. க.): விவேக சிந்தாமணி போன்ற பழைய நூல்கள் பள்ளிகளில் வைக்கப்படுமா ?

நிதி மந்திரி : அம்மாதிரி நல்லொழுக்கத்தைக் கற்பிக்கக்கூடிய பழைய நூல்களை வைக்க வேண்டுமென்பதில் அங்கத்தினர் போன்றோர் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

---

# புத்தகப் பூங்கா

***யார் யார் ?***

[தொகுத்தவர் : கெ. பக்தவத்சலம். கிடைக்குமிடம் : பேனா நண்பர்கள் சங்கம், 7, H. G. M., மேட்டூர் அணை, சேலம் மாவட்டம், விலை : 40 காசு.]

ஒரு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு நாடுகளிலும் உள்ளவர்கள், ஒருவரை ஒருவர் நேர்முகமாக அறிகின்ற வாய்ப்பைப் பெறமுடியாவிட்டாலும், கடிதங்கள் வாயிலாகத் தங்களுடைய கருத்துக்களைப் பறிமாறிக்கொண்டு, நட்புடைமையையும் பெருக்கிக் கொள்ளலாம் என்கிற அடிப்படையில் அமைந்து, சிறப்புமிக்க பணியாற்றிவருகிற சீர்மைமிக்க ஓர் அமைப்பு, மேட்டூர் அணையைச் சேர்ந்த பேனா நண்பர்கள் சங்கம். தமிழகம் உட்பட இந்தியாவின் பல பகுதிகள், இலங்கை, ஆப்பிரிக்கா, மலேயா, பர்மா, இந்தோனேசியா, அந்தமான் முதலிய பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இச் சங்க

(55–ம் பக்கம் பார்க்க)

# கொற்கை

[டாக்டர் மா. இராசமாணிக்கனார்]

## கொற்கையின் பழைமை

**பொருநையாறு** இன்று கடலொடு கலக்கும் இடத்திற்கு நான்கு கல் உள் தள்ளி, அவ்வாற்றின் வடகரையில் **கொற்கை** என்னும் பெயருடன் ஒரு சிற்றூர் இருக்கின்றது. பண்டைக் காலத்தில் பொருநையாறு இவ்வூர் அருகிற்றான் கடலொடு கலந்து வந்தது. பொருநையாற்று மண்ணும் மணலும் பல நூற்றாண்டுகளாகச் சேர்ந்து படிப்படியாக மேடிட்டுக் கடலைப் பின்னோக்கிச் செல்லும்படி செய்துவிட்டதால், கொற்கை, துறைமுகத்திற்குரிய வசதியை இழந்துவிட்டது. இன்றுள்ள கொற்கையிலும் சுற்றுப்புறங்களிலும் கிளிஞ்சல்களும் முத்துச் சிப்பிகளும் தரைக்கடியில் சிறிது ஆழத்தில் கிடைத்தலே, கடல் இந் நிலப்பகுதியை அடுத்து இருந்தமைக்கு ஏற்ற சான்றாகும். கொற்கைக்குப் பின்னர்க் **காயல்** (இன்றைய பழைய காயல்) பாண்டியர் துறைமுக நகரமாக விளங்கத் தொடங்கியது. கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காயலே சிறந்த துறைமுக நகரமாக இருந்தது என்பதை **மார்க்கோ போலோ** குறித்துள்ளார். பின் நூற்றாண்டுகளில் கொற்கை பற்றிய பேச்சே யாண்டும் காணப் படவில்லை. எனவே, ஏறத்தாழ கி. பி. 12-ஆம் நூற்றாண்டுடன் கொற்கையின் பொலிவு மறைந்து விட்டது என்று கொள்ளுதல் தவறாகாது.

கொற்கை நகரம் சங்க நூல்களில் பேசப்படுதலால், அதன் பழைமையை நாம் நன்கு உணரலாம். கி. பி. முதல் நூற்றாண்டில் தென் இந்தியக் கரையோரமாக வந்த ‘பெரிப்ளூஸ்’ என்ற பிரயாண நூலின் ஆசிரியரும், அடுத்த நூற்றாண்டில் வந்த தாலமியும் இப் பண்டை நகரத்தைச் சிறந்த துறைமுக நகரம் என்று குறிப்பிட்டுள்ளனர்; குமரிமுனையைச் சுற்றிவந்த கிரேக்க வணிகர் முதலில் இத்துறைமுகத்துக்குத்தான் வந்தனர் என்று குறித்துள்ளனர். மேலும் அவர்கள் மன்னார் வளைகுடாவைக் ‘கொற்கை வளைகுடா’ என்றே குறித்துள்ளமை, அவர்கள் காலத்தில் கொற்கை பெற்றிருந்த பெருஞ் சிறப்பினை நன்கு விளக்குவதாகும்.

சங்க நூல்களிற் பாராட்டிப் பேசப்பெற்ற கொற்கைத் துறைமுகம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே புகழ்பெற்றிருந்தது என்று கருதுதல் தவறாகாது.

பாரசிகர், அரேபியர், பொனீ

ஷியர், எதியோப்பியர், கிரேக்கர், உரோமர் போன்ற மேலை நாட்டவரும், பர்மியர், சீனர் முதலிய கீழை நாட்டவரும் வாணிகத் துறையில் கொற்கைத் துறைமுகத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்று ஆராய்ச்சியாளர் அறைகின்றனர். கொற்கைப் பெருந்துறை முத்தெடுக்கும் தொழிலிலும் சங்குகளை எடுத்துப் பொருள்களைத் தயாரிப்பதிலும் பெயர் பெற்றிருந்தது. எனவே, முத்துக்களும் சங்குகளும் சங்கால் செய்யப்பெற்ற பலவகைப் பொருள்களும் மிக்க அளவில் அயல் நாடுகட்கு ஏற்றுமதியாயின. மேலும், தமிழ் நாட்டிற் கிடைத்து வந்த தங்கம், யானைத்தந்தம், கருங்காலி, சந்தனம் முதலிய விலையுயர்ந்த மரங்கள், மணப்பொருள்கள், பட்டாலும் பருத்தியாலும் இயன்ற ஆடைகள், அரிசி முதலியன அயல்நாடுகட்கு அனுப்பப்பட்டன.

ஏறத்தாழக் கி. மு. 1400ல் வாழ்ந்துவந்த அத்தீனிய அரசர்கள் இக் கடல் வாணிக உறவினால் பாண்டியர்களை மதித்துப் போற்றினமைக்கு அறிகுறியாகப் 'பாண்டியோன்' என்ற பெயரைச் சூட்டிக்கொண்டனர். கருங்கடலின் கரையிற் கட்டப்பட்ட வாணிக நகரங்களும் பாண்டியனது துறைமுகப் பட்டினத்தின் பெயரால் 'கொல்கீஸ்' (கொற்கை) என வழங்கப்பெற்று வந்தன. பின் நூற்றாண்டுகளில் உரோமப் பேரரசர்களான அகஸ்டஸ், கிளாடியஸ் முதலியோர் பாண்டிய வேந்தருடன் நெருங்கிய வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்; பாண்டியர் அவைக்குத் தூதர்கள் மூலம் பரிசுப் பொருள்களை அனுப்பித் தங்கள் அன்பையும் நட்பையும் அறிவித்துக்கொண்டனர்.

"ஐரோப்பிய நாடுகட்கு மிகுதியான அரிசியை ஏற்றுமதி செய்த நகரம் பொருநைக் கரையில் இருந்த கொற்கையே யாகும். இத்தகைய வாணிகம் அக்காலத்தில் கிரேக்கர் வசம் இருந்தது. கிரேக்கர்க்கு முன்பு இந்திய வாணிகம் பாரசீகர், பொனீஷியர் என்பவரிடமே பெரும்பான்மை இருந்து வந்தது. தமிழ்ச் சொற்களாகிய **தோகை, அரிசி, இஞ்சி** முதலியன ஹீப்ரு முதலிய மொழி நூல்களில் காணப்படுகின்றமை இப் பண்டைக் கடல் வாணிக உண்மையை வலியுறுத்துவதாகும்," என்று ஆராய்ச்சி அறிஞர் கூறுகின்றனர்.

சங்க காலத்திற்குப் பிறகு கொற்கை பெற்றிருந்த சிறப்பை நன்கு அறிவிக்கும் சான்றுகள் மிகுதியாக இல்லை. பாண்டிய நாடு கி. பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டுவரை பாண்டியர் ஆட்சியில் இருந்தது; பின்னர் ஏறத்தாழ முன்னூறு வருடகாலம் சோழராட்சியில் இருந்தது. அக்காலத்தில் பாண்

டியநாடு இராச ராசப் பாண்டிய நாடு எனவும், கொற்கை சோழேந்திர சிம்ம சதுர்வேதி மங்கலம் எனவும் பெயர்களைப் பெற்றிருந்தன. அக்காலத்திற்றான் ஆட்சி மாறுபாட்டாலும் முன்னர்க் கூறப்பெற்ற இயற்கைக் கேடுகளாலும் கொற்கை தன் பொலிவை இழந்துவிட்டது. கி. பி. 12–ஆம் நூற்றாண்டிற்குப் பின் வந்த பாண்டியர் காலத்தில் கொற்கையின் சிறப்பைக் காயல் துறைமுகம் பெற்றுவிட்டது.

## கால்டுவெல் முயற்சி

திருநெல்வேலி மாவட்டத்தின் கீழ்க்கரையில் ஏறத்தாழ நாற்பதாண்டுகள் தங்கிக் கிறிஸ்தவ சமயத் தொண்டு செய்தவரும், "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற இணையற்ற நூலை எழுதி அழியாப் புகழ் பெற்றவருமான கால்டுவெல் ஐயர் சென்ற நூற்றாண்டில் இக் கொற்கையைப் பார்வையிட்டார்; ஆங்காங்குச் சில இடங்களைத் தோண்டி ஆராய்ச்சி நிகழ்த்தினார்; கொற்கையில் சங்குத் தொழிற்சாலை ஒன்று இருந்தமைக்குரிய அறிகுறிகளைக் கண்டார்; அங்குப் பலவகை நாணயங்கள் அவருக்குக்கிடைத்தன; அப்பெரியார் வேலைப்பாடமைந்த பெரிய தாழிகள் பலவற்றைக் கண்டார்; அங்குள்ள 'அக்கசாலை' என்னும் சிற்றூரைப் பார்வையிட்டு, அவ்விடத்தில் பண்டைப் பாண்டியர் நாணயங்களைச் செய்துவந்தனர் என்ற கருத்தை வெளியிட்டார். நெல்லை மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளில் பழைய நாணயங்கள் மிகப் பலவாகக் கிடைக்கின்றன. வேறு இடங்களில் கிடைக்காத சதுர நாணயங்கள் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. அவையனைத்தும் கொற்கைப் பாண்டியருடையனவே என்பதில் ஐயம் இல்லை.

"கொற்கையில் கிடைத்த செப்பு நாணயங்கள் சிலவற்றில் முதலாம் இராசேந்திர சோழன் (கி. பி. 1012–1044) உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் ஒரு புறத்தில் அவனது நின்ற கோலமும் மற்றொரு புறத்தில் அவனது இருந்தகோலமும் பொறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய நாணயங்கள் சோழ நாட்டின் வட எல்லை முதல் குமரி முனை வரையுள்ள தென் இந்தியப் பகுதிகளில் காணப்படுகின்றன. இதனால், சோழர் கொற்கை உள்ளிட்ட பாண்டிய நாட்டைக் கைப்பற்றி யாண்டனர் என்பது தெளிவாகிறதன்றோ?" என்று கால்டுவெல் பாதிரியார் கூறியிருத்தல் கவனிக்கத்தகும்.

## சிறந்த துறைமுக நகரம்

சிறந்த முறையில் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து கடல் வாணிகம் நடைபெறு நிலைக்களமாக இருந்த கொற்கை, சோழரது கடற்றுறைப் பட்டினமாகிய காவிரிப்பூம் பட்டினம்போன்று, அயல்நாட்டு வாணிகர் தங்கியிருக்கத்தக்க மாடமாளிகை

களைக்கொண்ட தெருக்களையும், நம் நாட்டு வணிகர் வாழத்தக்க வளம்மிகுந்த தெருக்களையும், பல துறைத் தொழிலாளர்கள் வாழத்தக்க தெருக்களையும் பல தொழிற்சாலைகளையும், வணிக இடங்களையும், கப்பல்களில் ஏற்றத்தகும் பொருள்களை வைக்கத் தக்க பண்டக சாலைகளையும் இறக்குமதியாகும் பொருள்களை வைக்கத்தக்க பண்டக சாலைகளை யும், பெரிய கடைத்தெருக்களை யும், கோவில்களையும் பிறவற்றையும் தன்னகத்தே பெற்றிருந்தது என்பது கூறாமே அமையுமன்றோ? அஃது அரசன் வாழ்ந்த இடமாகவும் இலங்கியது என்று சிலப்பதிகாரம் முதலிய தொன்னூல்கள் செப்புவதால், அரண்மனையையும் பெற்றுப் பெரும் பொலிவுடன் விளக்கமுற்றிருந்தது என்று கருதுதல் பொருத்தமே யன்றோ? சுருங்கக் கூறின், சுமேரியர் நாகரிகத்தின் உயிர் நாடியாக விளங்கிய பாபிலோன் நகரம் போலப் பாண்டியரது நாகரிக வளத்திற்கு உயிர் நாடியாகக் கொற்கைப் பெருநகரம் விளங்கியது என்று சொல்வது ஏற்புடையது.

கொற்கை தனது பெருந்துறை முத்துக்களாலும் கடல் வாணிகத்தாலும் பாண்டியர்க்குப் பெருஞ் செல்வம் அளித்து வந்த காரணத்தாற்றான், பாண்டியனை "கொற்கைக் கோமான்" என்றும், "கொற்கையாளி" என்றும் புலவர்களும் குடிமக்களும் உளமகிழ்ந்து பெருமிதத்தோடு பாராட்டலாயினர்.

— "பத்மஜோதி"

---

(51-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களின் முகவரிகளையும், வாழ்க்கைக் குறிப்புக்களையும், அவர்களின் தனித்தனி ஆற்றல்கள் — விருப்பங்களையும் அணி அணியாக எடுத்துக்காட்டுகிறது இந்த அழகிய இனிய புத்தகம். தலைசிறந்த தமிழ்த் தொண்டர் திரு. சி. ஆர். பழநியாண்டி, தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் திரு. ஊ. ஜயராமன், சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பொருளாதார விரிவுரையாளர் திரு. மா. இளஞ்செழியன், சென்னை நக்கீரர் கழகச் செயலாளர் திரு சிறுவை மோகனசுந்தரம், கவிஞர் கா. வேழவேந்தன் முதலிய பொதுத்தொண்டர்கள் பலரின் வாழ்க்கைக் குறிப்புக்கள், இந்நூலில் விரிவான முறையில் தரப்பட்டிருக்கின்றன. சிறந்த பேச்சாளரும் உயர்ந்த எழுத்தாளருமாகிய திருச்சி கி ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் செம்மையும் செழுமையும் மிகுந்த வாழ்க்கையைப் பற்றித் திரு. அன்புப்பழம் நீ அவர்கள் எழுதியுள்ள விரிவான கட்டுரை இந் நூலின் முடி மணியாகத் திகழ்கிறது. நூலின் அச்சும் அமைப்பு முறையும் போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளன.

# உடல் வளர்க்கும் மூலிகைகள்

[கடலூர், V. பலராமையா B. A., B. L.,]

## நாயுருவிக் கற்பம்

இது செடியினத்தைச் சேர்ந்தது. சிவப்பு, வெண்மை இரண்டு வகை, இவைகளில் சிவப்பு உயர்ந்தது. ஆனால் அது கிடைப்பதரிது. வெள்ளை நாயுருவி எல்லா இடங்களிலும் இருக்கும். இதை யறியாதவர்கள் சிலர். இதன் பூ துணியில் ஒட்டிக்கொள்ளும்.

இந்தச் செடிகளை சமூலம் கொண்டுவந்து நிழலிலுலர்த்தி உலர்ந்தபின் நெருப்புவைத்து சுட்டுச் சாம்பலாக்கி ஒருபடி சாம்பலுக்கு 4 படி ஜலம் விட்டுக் கரைத்துத் தெளிந்தபின், தெளிவையிறுத்து ஈயம்பூசிய பாத்திரத்தில் ஊற்றி எரிக்க நீர் சுண்டி வெண்மையான உப்பாகும். இந்த உப்பு மருந்து வகைகளுக்கு உபயோகமாகிறது. இவ்வுப்பில் ஒரு மிளகளவு எடுத்து ஒரு கோப்பை நீராகாரத்திலாவது, வெந்நீரிலாவது காலை மாலை சாப்பிட்டுவர சகல வியாதியும் தீர்ந்து தேவசரீரமாகும். மூலம், சுவாசகாசம் (Asthma) குணமாகும்.

கீழ்க் குறிப்பிட்ட முறையின் படி செய்து சாப்பிட மேற்கண்ட வியாதிகள் நீங்குவதல்லாமல் பெருங்கற்பமாகும். ஆனால் மருந்துகள் செய்து வழக்கமுள்ளவர்களே இதைத் தயாரிக்க முடியும்.

நாயுருவி முற்றினதாய் நறுக்கிப் பசுவின கோமயத்தில் நனைத்துப் பாண்டவாயிலிட்டு பூப்புடத்தைலமிறக்கிவைக்கவும். அத் தைலத்தில் ஒரு குன்றி யளவு வெற்றிலையில் வைத்து ஒரு நாளைக்கு ஒரு முறை மென்று சாப்பிட்டுவர பெருமந்தார சுவாசகாசம் (Asthma), நுனிக் கிருமல் (Dry Cough), ஈளை (Phlagm), கண்டத்தரிப்பு (Irritation in the throat) நீங்கிக்காயமதைப்பலப்படுத்தும்.

நாயுருவி இலையை எருக்கம் பாலிலரைத்துக் குகை செய்து சோத்துப்பைபெருமணியாய் அதனுள் வைத்துப் புடமிடக்கட்டும், இந்த உப்பைக் குன்றியிடை கொடுக்க வாயு (Gas) வகைகள் குணப்படும்.

## சுக்கு

இஞ்சி உலர்ந்தால் சுக்கு. "சுக்கைப்போல் மருந்தில்லை, சுப்ரமண்யர்போல் தெய்வமில்லை." என்பது முதுமொழி. கேட்கும் வரங்களை உடனே கொடுக்க வல்லவர் சுப்ரமணியர். அதேபோல் சொன்ன வியாதிகளை உடனே தீர்க்கும் வல்லமையுடையது சுக்கு. இம் மூலிகையின்பெருமையை நம் பெரியோர்கள் அறிந்தவர்கள். விருந்தாளி வந்தவுடன் மோரில் வெல்லம்

கரைத்தோ மோரில்லாவிடில் நீரில் வெல்லத்தைக் கரைத்தோ அதில் சுக்கு தட்டியிட்டுப் பானகமாய்த்தருவது வழக்கம். இந்தப் பானகம் சாப்பிட்ட கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வயிற்றில், குடலில், அபானத்திலுள்ள வாயு (காற்று) அகன்று பசியைத் தூண்டிவிடும். வந்த விருந்தினர் நன்ருய் ருசித்து உண்பர். ஆனால் இக்காலத்தியவர் விருந்தாளிக்குக் காபி கொடுத்தவுடன் அவருக்குப் பித்தம்மீறிப் பசியடங்கிச்சாப்பிடும்இலையின் மூலை மூடுக்குகளில் உணவை ஒதுக்கி நோயாளியைப்போல் சாப்பிடுகிறார்.

"காலையில் இஞ்சி கடும் பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டலம் உண்டால்"

குமரனுவான் என்று மேலே சொல்லியிருக்கிறோம். இஞ்சியைப் பற்றிக் கீழே எழுதியிருக்கிறோம்.

குறிப்பு :—

சுக்குவின் மேல்தோல் அகற்றியே உபயோகப்படுத்த வேண்டும். பல வியாதிகள் வாயுவினுல் (gas)உண்டாகின்றன.(உதா):— மூலம், ஹிருதயத்துடிப்பு (Palpitation of the heart) பசி இன்மை, குன்மக்கட்டி (gastinites) ஆகையால் இந்த வாயுவை அகற்றினுல் சரீரம் பலப்படுமென்பதில் என்ன ஆக்ஷேபணை. கீழே சுக்கை உபயோகிக்கச் சில சிறுமுறைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

அஜீரணங்களுக்கு :— சுக்கு பலம்—1, சோத்துப்பு பலம் $\frac{1}{2}$, சோத்துப்பைத் தண்ணீர் விட்டுக் கட்டியாய் அரைத்துச் சுக்கின் மேல் பூசி கும்பித்தணலில் புகுத்தி வேகவைத்து எடுத்து, உப்புக்கவசம் நீக்கி, சுக்கைத் தூள்செய்து ஒருசிட்டிகை முதல் இரண்டு சிட்டிகை வாயிலிட்டு வெந்நீர் சாப்பிட வயிற்றுப்பல், வயிற்றிரைச்சல்,மார்புஅடைப்பு, வாயுவால் உண்டாகும் பேதிகள் குணமாகும்.

பசியுண்டாக:— மேல்தோல் நீக்கிய சுக்கு பலம் 1. நல்ல வெல்லம் பலம் 1 இரண்டும் கூட்டி இடித்துப் பதனம் செய்யவும். காலைதோறும் மென்று தின்று நீராகாரம் சாப்பிட்டுவர மந்தாக்னிரோகம் தீர்ந்து நல்ல பசியுண்டாகும்.

எல்லா வயிற்றுக்கோளாக்றுகும்:— தோல்நீக்கிய சுக்கு 1 பலம். பொடிசெய்த இந்துப்பு பலம் 1. சுக்குவைச் சிறுதுண்டுகளாக நயாபைசாவைப்போல்நறுக்கி சுக்குத் துண்டுகள் அமுங்க எலுமிச்சம்பழ ரசத்தைவிட்டு ரவியில்வைத்து ரசம் இழுத்துக் கொண்டபின் மறுபடியும் சுக்கு அமுங்கும்படிச் பழச் சாற்றை ஊற்றி ரவியில் வைத்து உலர்ந்தபின் மறுபடியும்பழச்சாறு ஊற்றி உலரவைத்து, இப்படி ஏழுமுறை செய்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து இத்துடன் சீரகம் பலம்

1, பழச்சாற்றில் ஒருமுறை ஊற வைத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்செய்து வெருகடி பிரமாணம் நீராகாரம் அல்லது வெந்நீரில் கொள்ளவும்; தேனிலும் சாப்பிடலாம். இதற்கு சர்வ ரோக நிவாரணி யெனப்பெயர். மேற்கூறியவைகளைத் தயார் செய்து வீட்டில் வைத்துக்கொள்ளலாம். 6 மாதங்கள் வரை உபயோகிக்கலாம்.

வேறு சுக்குநீர்:—சுக்குப்பொடி பலம் 1, தோல் எடுத்த ஏலம் பலம் ½, இரண்டையும் பொடித்து ஜலத்திலிட்டு பனங்கற்கண்டு வேண்டிய அளவு சேர்த்துக்காய்ச்சி வடித்துகொஞ்சம் பால் சேர்த்துச் சாப்பிட மிகவும் ருசியாக இருப்பதுமன்றி நல்ல பசியையும் தூண்டும்.

## இஞ்சி

சுக்கு, வாய்வு, வாதம் முதலியவைகளைப் போக்கக்கூடியது. இஞ்சிக்கும் இந்தக் குணங்களுண்டு. ஆனால் இஞ்சிக்குப் பித்தத்தை நீக்கும் குணமும் முக்கியமாய் உண்டு. அதை உத்தேசித்தே காலையில் இஞ்சியெனச் சொல்லப்பட்டுள்ளது. இஞ்சி கபங்களைச் சுலபமாய்விலக்கவல்லது. கபத்தை அகற்றக்கூடியமூலிகைகளையேகற்பங்களாகச் சித்தர்கள் எடுத்துள்ளனர் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் இஞ்சி கற்ப சக்தியுடையதா இல்லையா என்பதை நாமே அறிந்து கொள்ளலாம்.

இஞ்சியை நம் வீடுகளில் மோர் தயிர் பச்சடி, சாம்பார் முதலிய ஆகாரங்களில் சாதாரணமாய்ச் சேர்ப்பதுண்டு.

குறிப்பு :—

சுக்குவின் மேல்தோலை நீக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இஞ்சிக்கு மேல்தோல் நீக்குவதல்லாமல் சுண்ணாம்புச் சத்தையும் அகற்றுவது.

உபயோகம் :— இஞ்சியை அரைத்து நீரில் கரைத்து தெளிந்தபின் அத்தெளிவை உபயோகித்தலே முறை. அத்தெளிவின் கீழ் படிந்திருக்கும் வெண்மையான சுண்ணாம்பையும் உபயோகப்படுத்தினால் அடிவயிற்றில் உஷ்ணம் மீறி உபத்திரவங்களை உண்டு பண்ணும்.

இஞ்சி சர்பத் :— மேற்சொன்னபடி எடுத்த இஞ்சிச் சாறு ½படி எலுமிச்சம்பழச்சாறு படி ⅛, இரண்டும் கூட்டி அதில் சீனி ½வீசை கரைத்து அடுப்பேற்றிக்காய்ச்சிப் பாகுபதம் வந்ததும் இறக்கி ⅛ படி சுத்தமான தேன்விட்டுக் கலக்கி சீசாவில் பத்திரப்படுத்தவும்.

காலையில் தேக்கரண்டியளவு வெந்நீரில் கலக்கி உட்கொள்ள எல்லா வாத பித்தரோகங்களையும் ஒழிக்கும். நல்ல பசியைத் தூண்டும். ஈரலை (Liver) உற்சாகப்படுத்தும். மசக்கை உள்ள கர்ப்

(45-ம் பக்கம் பார்க்க)

# எமது
# வெளியீடுகள்

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**
('ஆரம்பக் கல்வி' நிலையம்)
**94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.**

*தபால் பெட்டி எண்* 1818. *டெலிபோன் எண்* **24544.**

**ஆரம்பப் பள்ளிகளுக்கு......**

* முதல், இரண்டாம் வகுப்புகளுக்கு அரசியலார் வெளியிடுகின்றனர்.

## திரு. வி. க. தமிழ் வாசகங்கள்

*ஆசிரியர் :*

**பி. வீரராகவன்**

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 3 | 28–5–'58 |
| நான்காம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13–5–'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 0 | 0 | 11 | 18–5–'60 |
| ஆறாம் வகுப்பு | 1 | 4 | 0 | 25 | 10–5–'61 |

★

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

*ஆசிரியர் :*

**இராசாம்பாள் கோவிந்தராசன்,** M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 5 | 28–5–'58 |
| நான்காம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13–5–'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 0 | 0 | 13 | 18–5–'60 |

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

*ஆசிரியர் :* புலவர் சொ. முருகேசனார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 12 | 0 | 4 | 16–5–'62 |

## சிறுவர் கணக்கு நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

ஆசிரியர்: பி. வீரராகவன்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 | 8 | 0 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0 | 12 | 0 | 43 | 13–5–'59 |
| நான்காம் வகுப்பு | 0 | 14 | 0 | 25 | 13–5–'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 4 | 0 | 39 | 15–5–'60 |

## புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1 | 8 | 0 | 25 | 10–5–'61 |
| ஏழாம் வகுப்பு | 1 | 12 | 0 | 13 | 16–5–'62 |

## சிறுவர் சமூக நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 | 10 | 0 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0 | 12 | 0 | ... | ... |

ஆசிரியர்: த. சே. உமாபதி M. A., L. T.

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சென்னை | 1 | 14 | 0 | 44 | 13–5–'59 |
| செங்கற்பட்டு | 1 | 14 | 0 | 44 | 13–5–'59 |
| வட ஆற்காடு | 1 | 14 | 0 | 44 | 13–5–'59 |
| தென் ஆற்காடு | 1 | 14 | 0 | 44 | 13–5–'59 |
| சேலம் | 1 | 14 | 0 | 44 | 13–5–'59 |
| கோயம்புத்தூர் | 1 | 14 | 0 | 44 | 13–5–'59 |
| நீலகிரி | 1 | 14 | 0 | 46 | 13–5–'59 |
| திருச்சிராப்பள்ளி | 1 | 14 | 0 | 46 | 13–5–'59 |
| தஞ்சாவூர் | 1 | 14 | 0 | 46 | 13–5–'59 |
| மதுரை | 1 | 14 | 0 | 22 | 13–5–'59 |
| இராமநாதபுரம் | 1 | 14 | 0 | 22 | 16–5–'62 |
| திருநெல்வேலி | 1 | 14 | 0 | 22 | 16–5–'62 |
| கன்னியாகுமரி | 1 | 14 | 0 | 22 | 16–5–'62 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 12 | 0 | 43 | 18–5–'60 |

# சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேல், M.A., L.T.

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1 12 0 | 14 | 18–5–'61 |

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A., L.T.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2 0 0 | 18 | 16–5–'62 |

★

# இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : பி. வீரராகவன்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 6 0 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0 7 0 | ... | ... |

ஆசிரியர் : M. விவேகானந்தா, B.Sc., L.T.

| | | | |
|---|---|---|---|
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 30 | 13–5–'59 |

★

# சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A., L.T.

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 1 4 0 | 26 | 18–5–'60 |

★

# பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A., L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1 8 0 | 3 | 10–5–'61 |

★

துணைப்பாடப் புத்தகங்கள்

# சிறுவர் அறிவுக் கதைகள்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனுர்

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 15 | 18–5–'60 |

## நீதிக் கதைகள்

ஆசிரியர் : வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 17 | 18–5–'60 |

★

## அறிவுச் சுடர்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 10 0 | 10 | 10–5–'61 |

**MOTHER INDIA SUPPLEMENTARY READER**

(By Mrs. Lucy Arulraj)

| | | | |
|---|---|---|---|
| VI STANDARD | 0 8 0 | 13 | 10–5–'61 |

**FOR HIGH SCHOOLS**

உயர் நிலைப் பள்ளிகளுக்கு

## திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

| | விலை | செஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·25 | 25 | 10–5–'61 |
| எட்டாம் வகுப்பு | 1·75 | 21 | 13–5–'59 |

★

## புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·50 | 28 | 10–5–'61 |
| ஏழாம் வகுப்பு | 1.75 | 13 | 16–5–'62 |

## சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேல், M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·75 | 14 | 10–5–'61 |

## சமூக நூல்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2·00 | 18 | 16-5-'62 |
| எட்டாம் வகுப்பு | 2·50 | 35 | 16-5-'62 |

## பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. LAKSHMINARAYANASAMI, B.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆரும் வகுப்பு | 1·50 | 30 | 10–5–'61 |

ஆசிரியர் : K. LAKSHMINARAYANASAMI, B.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·50 | 35 | 10–5–'61 |

## இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனர்

| | | | |
|---|---|---|---|
| ஆரும் வகுப்பு | 75 | 4 | 16-5-'62 |

## மாணவர் இலக்கணம்

| | | | |
|---|---|---|---|
| எட்டாம் வகுப்பு | 0 14 0 | 4 | 29–7–'59 |

## இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 1 4 0 | 11 | 18–5–'60 |
| பத்தாம் வகுப்பு | 1 8 0 | 31 | 10–5–'61 |

த. சே. உமாபதி, M.A.,L.T.

ENGLISH NON-DETAILED

By Mrs. Lucy Arulraj.

| | | | |
|---|---|---|---|
| Mother India Supplementary Reader VI Std. | 0 8 0 | 13 | 10–5–'61 |
| Mother „ „ „ III Form | 0 10 0 | 24 | 10–5–'61 |

TAMIL NON-DETAILED

| | | | |
|---|---|---|---|
| அறிவுச் சுடர் (ஆரும் வகுப்பு) | 0 10 0 | 10 | 10–5–'61 |
| நாடும் மக்களும் | 1 0 0 | 17 | 18–5–'60 |
| தொண்டை நாட்டு மன்னர் | 1 0 0 | 19 | 18–5–'60 |
| பூம்புகார் | 0 14 0 | R.C.No. 9 | 15-3-'61 |
| திரு. வி. க. | 0 14 0 | 23 | 13–5–'59 |

ஆசிரியர் : லீலா பார்த்தசாரதி, B.A.,B.T.

| | | | |
|---|---|---|---|
| கணிதம் கற்பிக்கும் முறை | 2·00 | 2 | 5–7–'61 |

# சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : R. சேஷாத்திரி, B.A., B.T.

| | |
|---|---|
| ஆறும் வகுப்பு | 0·87 ந. பை. |
| ஏழாம் வகுப்பு | 0·75 ந. பை. |
| எட்டாம் வகுப்பு | 1·25 ந. பை. |
| ஒன்பதாம் வகுப்பு | 1·25 ந. பை. |
| பத்தாம் வகுப்பு | 1·50 ந. பை. |

## FOR ELEMENTARY SCHOOLS

# சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர்: R. சேஷாத்திரி, B.A., B.T.

(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

**நான்காம் வகுப்பு**

**மாவட்டங்கள்**

| | |
|---|---|
| சென்னை | 0·75 ந. பை. |
| செங்கற்பட்டு | 0·75 ந. பை. |
| வட ஆற்காடு | 0·75 ந. பை. |
| தென் ஆற்காடு | 0·75 ந. பை. |
| சேலம் | 0·75 ந. பை. |
| கோயம்புத்தூர் | 0·75 ந. பை. |
| நீலகிரி | 0·75 ந. பை. |
| திருச்சிராப்பள்ளி | 0·75 ந. பை. |
| தஞ்சாவூர் | 0·75 ந. பை. |
| மதுரை | 0·75 ந. பை. |
| இராமநாதபுரம் | 0·75 ந. பை. |
| திருநெல்வேலி | 0·75 ந. பை. |
| கன்னியாகுமரி | 0·75 ந. பை. |
| ஐந்தாம் வகுப்பு | 0·94 ந. பை. |
| ஆறும் வகுப்பு | 0·87 ந. பை. |
| ஏழாம் வகுப்பு | 0·75 ந. பை. |

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

# பாடப் பயிற்சி திறவு கோல்

(Key to Social Record)

4வது வகுப்பு முதல் 10வது வகுப்பு வரை சமூகப் பாடப் பயிற்சிகளுக்குத் திறவுகோல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளில் பலவிதமான கம்பெனிகளின் சமூக பாடப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில புத்தகங்களில் பயிற்சிப் புத்தகங்களில் கேட்கும் வினாக்களுக்கு விடை கிடைக்காமல் போகலாம். சில ஆசிரியர்களுக்கு உடனே விடை கொடுக்கச் சிரமம் ஏற்படலாம். வினா விடைகள், விளக்கங்கள் கொண்ட திறவுகோல் எல்லா வகுப்புகளுக்கும் வெளியிட்டிருக்கின்றோம். இது முக்கியமாக ஆசிரியர்கள் கையில் இருக்கவேண்டிய புத்தகமாகும். ஆதலால் திறவுகோல் இனமாக எமது பயிற்சி நூல் வைத்துள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறோம். சிலர் பிள்ளைகளுக்கும் விடையை வாங்கிக்கொடுத்து வருகிறார்கள். அது சிறந்த முறையல்ல. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட திறவுகோல் வேண்டுபவர்களுக்கு எட்டணா (50 ந. பை.) பிரதிக்கு வீதம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பாடப்பயிற்சிகள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு வகுப்பு வாரி ஒரு திறவுகோல் பயிற்சிகளோடு இனமாக அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "**ஆரம்பக் கல்வி ஆபீஸ்**",
அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
சென்னை-1.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!


★ **படிப்பதற்கேற்ற எழில்மிகு ஏடுகள்!**
★ **நடிப்பதற்கேற்ற நற்றமிழ் நாடகங்கள்!!**

**இதோ**

**பைந்தமிழ் எழுத்தாளர்**

## திருவாளர் **தாமரைக் கண்ணன்** அவர்கள்

**தீட்டிய**

அழகிய நாடக நூல்கள்! பள்ளி நூல்நிலையங்களில் வைப்பதற்கேற்ற அருந்தமிழ்க் கருவூலங்கள்!

| | ரூ. | காசு |
|---|---|---|
| **1. வெண்ணிலா** | 1 | 50 |

*தன் அண்ணனைத் திருத்தியதுடன் நன்கொடை யென்றால் நானூறுமைல் தூரம் ஓடும் தந்தைக்கும்*

நல்வழிகாட்டியாக இருந்து கல்விக்கூடங்கள் கலைக்கூடங்களாக விளங்கப் பாடுபடும் ஓர் மாணாக்கியைப் பற்றிய நாடகம். கருத்தாழமும் நகைச் சுவையும் நிறைந்த சமுதாயப் படைப்பு!

## 2. மருது பாண்டியர் 2 00

வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழிக்க அரும்பாடு பட்டுத் தம் நல்லுயிர் ஈந்து நற்புகழ் எய்திய தமிழ் மறவர் இருவரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகம். துள்ளும் நடையும் துடிப்புள்ள வசனங்களும் நெஞ்சத்தை உருக்கும் காட்சிகளும் நிறைந்த உணர்ச்சிமிக்க சித்திரம்!

## 3. அலெக்ஸாண்டர் 1 50

'உலகிலுள்ள காடெல்லாம் நாடாக வேண்டும்; அந்த நாடெல்லாம் நானாள வேண்டும்' என்று மண்ணகமெங்கணும் வெற்றி முரசு கொட்டிய கிரேக்கப் பெருவேந்தனின் வரலாற்றை முழுமையாக விளக்கும் அரிய நாடகம்! உள்ளத்தைக் கலங்க வைக்கும் காட்சிகளும் உணர்ச்சியுடன் வீறு கொண்டு எழச்செய்யும் பகுதிகளும் சிந்தனைக்கு அரிய விருந்தளிக்கும் நிகழ்ச்சிகளும் நிறைந்த ஈடு இணையற்ற ஏடு! தமிழில் இதுபோல் இதுவரை வெளிவந்ததில்லை!!

## 4. கிள்ளிவளவன் 1 50

கிள்ளிவளவன், நிலாச்சோறு, குமணன், இரத்த பாசம், புத்தர் ஆகிய ஐந்து அழகிய ஓரங்க நாடகங்களின் தொகுப்பு. ஏற்றமிகு கருத்துக்களைக்கொண்ட எழிலார் ஏடு!

கழிவு உண்டு. அருள் கூர்ந்து அணுகுங்கள்

★

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

Venkatesan Press, Madras-1.